தென்மொழி



மொழிப்போர் புரி!

—*—

மொழிப்போர் புரி!
செழிப்பாந் தமிழ்
மொழிப்பால் குடிப்பாய்-இனிப்
பழிப்பார் உனை;
அழிப்பார் பினை
விழிப்பாய் தமிழா!

அறப்போர் புரி!
சிறப்பாந் தமிழ்
மறப்போர் புரிவாய்!-உயிர்
துறப்பார்க் கினிப்
பிறப்பார் வயின்
இறப்பே தடடா!

சிறுத்தாய் என
ஒறுத்தார்; துயர்
பொறுத்தாய் பலநாள்-உயர்(வு)
அறுத்தார்; குரல்
மறுத்தார்; நிலை
நிறுத்தாய் நெடுந்தோள்!

தனித்தமிழ் இலக்கியத் திங்களித
ஐப்பசி - தி.பி.1994.

தென்மொழி
இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.

சுவடி 1. ஓலை 9.

தி. பி. 1994
ஐப்பசித்திங்கள்.
(1963–அக்டோபர்)

●

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித
ஞா. தேவநேயப் பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்

●

உரிமை, வெளியீடு
தாமரை
உலக முதல்வி

●

அச்சகம்
மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

தலைமை (ஏ) மாற்றம்!

பல சரக்குக் கடையொன்றின் அன்றாட வாணிகத்தில் வரவர விறுவிறுப்புக் குறைந்து கொண்டே வந்தது. தொடக்கத்தில் புதுக்கடையாக இருக்கின்றதே ஏதோ நல்ல சரக்காக இருக்காதா என்று நினைத்துக் கொடுக்கல் வாங்கல் செய்த வாடிக்கையாளர் எல்லாரும் ஒவ்வொருவராய் வேறு கடையைப் பார்க்கத் தொடங்கினர். காரணம், விற்பனைச் சரக்கில் கலப்படம் மிகுந்து கொண்டே வந்தது. அரிசியில் சரி பகுதிக் கல்லும் மண்ணும்! எண்ணெய்களின் தனித் தன்மை கெட்டு அவற்றில் ஒரு கூட்டுறவு ஏற்பட்டு வந்தது. ஒரு தூக்குப் புளியில் உள்ள எல்லாக் கொட்டைகளும் விடாமல் ஒட்டிக் கொண்டே வாடிக்கையாளரின் வீடுகளுக்குப் போயின. மிளகும் எலிப் புழுக்கையும் இரண்டறக் கலந்துறவாடின. மளிகை மன்னார்சாமிக்கு இந்நாடகத்தையெல்லாம் பார்க்க நேரமில்லை. அவருக்கு எவ்வளவோ வேலை. ஆனால் அவர் தம் கடையின் அன்றாட வாணிகம் குறைந்து கொண்டே வந்ததைக் கண்டார். அது குறையாமல் வளர ஒரு திட்டம் தீட்டினார். கடையில் கல்லாப் பெட்டியில் அமர்ந்து கொண்டு காசு வாங்கிப்போட்டுக் கொண்டிருந்த தம் வேலையை விடுத்து விட்டுத், தம் கடையிலேயே வேலை செய்த வேறொருவரிடம் தம்இடுப்பில் உள்ள திறவுகோற் கொத்தைக் கொடுத்தார். இறங்கி மளமளவென்று சரக்குகள் குவிந்து கிடைக்

கும் மண்டிக்கே புறப்பட்டுப் போனார். அங்குள்ள சரக்குகளை யெல்லாம் ஆட்களைக் கொண்டு புடைத்துத் தூற்றித் துப்புரவு செய்தபின்பே கடைக்கு அனுப்பிவைக்க எண்ணங்கொண்டார். சரக்கெல்லாம் ஒழுங்காக வண்டிகளில் ஏற்றப்படும் வரை கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு மன்னார் சாமி விழிப்புடன் இருந்தார்; ஆனால் பயன்...? வண்டியில் ஏற்றப் பெற்ற மூட்டைகள் கடைக்கு வந்து பிரிக்கப்பெற்றதும் முன்னிருந்த நிலையிலும் கீழான நிலையே தென்பட்டது. மூட்டைகளைக் கொண்டு போகும் வழியில் ஏற்படும் கொள்ளை ஊதியம் அடிக்க விரும்பும் கள்ள வாணிகனின் கைவரிசை மாறினாலல்லவா, நல்ல சரக்காகக் கடைக்குவந்து சேரும்?

அண்மையில் தமிழ் நாட்டு அமைச்சரவையிலும் பிற அமைச்சரவைகளிலும் ஏற்பட்ட தலைமை மாற்றத்திற்கும், மன்னார்சாமி கடையின் நிலைமை மாற்றத்திற்கும், எவ்வகைத் தொடர்பும் இல்லை என்றாலும், இரண்டு இடங்களிலும் நடந்த நடவடிக்கைகளின் முதலும் ஒன்றே! முடிவும் ஒன்றே! முன்னாள் முதல் அமைச்சர் மாறிப் புதிய அமைச்சர் என்று கூறற்கு ஒருவருமில்லாத புதிய (!) அமைச்சர் அவை, எவ்வகையில் முன்னுள்ள நடவடிக்கைகளை மாற்றுமோ யாம் அறியோம். இனி நடவடிக்கைகளில் மாற்றம் எதுவும் இருக்காது, முன் போலவே தான் நடந்துவரும் என்று கூறப்படுமேயானால், பின் இம் மாற்றத்தால் பொதுமக்களுக்கு ஏற்படப் போகும் புதிய நன்மைகள் எவை என்றும் குறிப்பிடவோ, எண்ணிப் பார்க்கவோ ஒன்றும் இல்லாமற் போகின்றது. சரக்குகள் மாறாத பொழுது, வெறும் விற்பனையாளரை மாற்றி விடுவதால் எப்படி மன்னார்சாமி கடையின் அன்றாட வாணிகம் நன்றாகி விடாதோ, அப்படியே பேராயக் கட்சிக் கொள்கைகளை மாற்றாமல் அவற்றை நடத்தி வரும் ஆட்களை மட்டும் மாற்றிவிடுவதால் நிலைமை எள்ளத் துணையும் மாறிவிடாது. இது வெள்ளிடை மலை. பொது மக்கள் இம் மாற்றத்தால் ஏமாந்து போகமாட்டார்கள். அன்றி, இஃது அரசியல் நடவடிக்கைகளை மாற்றுவதற்காக ஏற்பட்ட திட்டம் அன்று; கட்சி நடவடிக்கைகளை மாற்றுவதற்கான திட்டமே என்று கூறுவார்களானால் அக் கட்சியின் நடவடிக்கைகளின் தனிப்பட்ட மாற்றம் எப்படி அரசியல் சட்டங்களின் ஆளுமைப் போக்கை மாற்றிவிடப் பயன்படும் என்பதும் நமக்கு விளங்கவில்லை. ஆணையும் சட்டமும் கொண்டு செய்ய முடியாத சீர்திருத்தங்களை விலகிய முதலமைச்சர் வெறும் கட்சியின் வலுவற்ற கொள்கைகளை மட்டும் வைத்துக்கொண்டு என்ன சீர்திருத்தம் செய்துவிடப் போகின்றார் என்பதும் புரியாத புதிரே!

புதிய முதலமைச்சர் மக்கள் துணையை இழந்தவர் என்பது அவர் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடவோலைக்

கணக்கைப் பார்த்தாலே தெள்ளிதின் விளங்கும். வம்பும் வழக்கும் பண வலிமையாலும் ஆணை வலிமையாலும் சரி செய்யப் பெற்றுச் சட்ட மன்றத்தில் இடம் பெற்ற ஒருவர் மேல், மக்கள் அவ்வளவு விரைவில் நம்பிக்கை கொண்டுவிடமாட்டார்கள். இக்கருத்தை இனி வருகின்ற பொதுத் தேர்தலால் நன்கு புரிந்து கொள்ளலாம்.

எவரும் விரும்பாமலேயே ஒரு சிலரின் தனிப்பட்ட ஆற்றலால் ஏற்படும் இம் மாற்ற நிலைகளை மக்களால் உடனடியாகச் சரி செய்ய முடியாமற் போவதால், அம் மாற்றத்தை அவர்கள் விரும்பாமலேயே ஏற்றுக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை குடியரசாட்சியில் ஏற்பட்ட ஒரு பெரிய வழுக்கலாகும். சட்டத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய ஓட்டையாகும். அதனாலேயே மக்கள் தம்மால் ஒரு முறை சரியாகவோ தப்பாகவோ தேர்ந்தெடுக்கப் பட்ட அமைச்சர்களின் தாறுமாறான நடவடிக்கைகளை ஐந்தாண்டுக் காலம் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. சட்ட முறைகள் அவ்வாறு சங்கிலிப் பிணிப்பாக வலிந்திருப்பதனால் மக்கள் கொஞ்சம் விழிப்புடன் நடந்து கொள்ளத் தவறினாலும்கூட, ஐந்தாண்டுகட்குப் பெருந்தொல்லைகளை வலிந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய ஆட்சி அமைப்பின் குறைபாடு எதிர்கால மக்களின் தன்னுரிமைப் போக்கால் கட்டாயம் மாற்றப்படும்; அதுவரை மக்கட்கும் ஆட்சியினர்க்கும் இத்தகைய இழுப்பும் பறிப்புமான நிலை இருந்தே தீரும்.

இனி, மக்கட்குப் புதிய தலைமையால் ஏதாவது நன்மை பிறக்குமா வென்று சிறிது கணித்துப் பார்ப்போம். அமைச்சர் கட்கிடையில் முன்னிருந்த பொறுப்புகள் ஓரளவு மாற்றப் பெற்றுள்ளன. திரு. ப க் த வ த் ச ல ம் அவர்கள் இன்றியமையாத பொறுப்புகளை மிக விழிப்பாகத் தம் கைகளிலேயே வைத்துக் கொண்டுள்ளார். பொது மேலாண்மை (நிருவாகம்), திட்டம், பொருள், கல்வி, தொழிலாளர் நலன், சட்ட மன்றம், தேர்தல், அறநிலையக் காப்பு, ஆட்சி மொழி முதலியன அவர் ஏற்றுள்ள பொறுப்புகள்.

கடந்த கால அரசியல் நடவடிக்கைகளிலிருந்து, திரு. பக்தவத்சலம் அவர்களின் தனிப்பட்ட வினையாற்றலை மட்டும் எடுத்துப் பார்ப்போமானால், எவ்வெத் துறைபற்றி அவர் பொது மக்களின் குரலுக்குச் செவி சாய்க்கவில்லையோ அவ்வத் துறைகளின் பொறுப்புகளையெல்லாம் மிகவிழிப்பாகத் தாமே வைத்துக் கொண்டிருப்பதைக் கூர்ந்த நடுநிலை அரசியல் நோக்காளர்கள் கண்டு கொள்ளாமற் போகார். இவர் அத்துறைகளில் எவ்வளவு நாட்டமுடையவராக உள்ளார் என்பதைக் குறிப்பிடக் கீழ்வரும் ஓர் எடுத்துக் காட்டே சாலும் எனக் கருதுகின்றோம்.

முன்னாள் முதலமைச்சர் திரு. காமராசர் தாம் வேலைவிலகு தலுக்கு முன் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் ''அடுத்த ஆண்டிலிருந்து நாட்டில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் இல வசக் கல்வி அளிக்கப்படும்'' என்று குறிப்பிட்டார். அதைத் திரு பக்தவத்சலமும் வரவேற்றுப் பேசினார். ஆனால் தாம் முதலமைச்சர் ஆவதெனத் திட்டவட்டமாகத் தெரிந்தவுடன், ''அஃது அவ்வளவு எளிதன்று. அதற்கு நம்பொருள்நிலை இடங் கொடாது'' என்று ஒரு பொதுக்கூட்டத்தில் மறுத்துப் பேசினார். இதைக் குறிப்பாக உணர்ந்த திரு. காமராசர், ''என்ன செலவா னாலும் இலவசக் கல்வித் திட்டத்தைக் கைவிடக் கூடாது'' என்று மீண்டும் ஒரு கூட்டத்தில் அறிவித்துள்ளார். தமிழ் நாட்டில் உள்ள கோயில்கள் அத்தனையும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று பேரார்வமும் பெரு முயற்சியும் கொண்டுள்ள திரு. பக்தவத்சலம் கல்வித் துறையில் எத்தகைய ஏனோதானோ போக்கைக் கொண்டுள்ளார் என்பதற்கு மேற்கண்ட நிகழ்ச்சியே போதுமான சான்றாகும். திரு. காமராசர் தாம் வேலை விலகிய பின்னை எக்காலத்தும் எவ்விடத்தும் எத்துறையிலும் நுழைந்து தம் கருத்துகளை வலியுறுத்திக் கொண்டிருக்க முடியாது. கல்வி, பொருள்,தேர்தல், ஆட்சி மொழி ஆகிய நான்கு பொறுப்புகளும் திரு. பக்தவத்சலம் அவர்களின் கைகளில்தாம் உள்ளன என்ப தையும் எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம்

ஆட்சி மொழி பற்றி இப்பொழுதுள்ள தலைகீழான கருத்து வேறுபாட்டுக்கும் தமிழை முழு அளவில் ஆட்சி மொழியாகச் செய்யும் சுணக்கத்திற்கும் திரு. பக்தவத்சலமே முழுப் பொறுப் பாளியாவர். திரு. காமராசர் ஆட்சிக்கு வந்த பின்தான் தமிழ் ஆட்சிமொழியாகும் சட்டம் கொண்டு வரப்பெற்றது. அதற்கு முன் பல அமைச்சர் அவைகளிலும் பங்கு கொண்டிருந்த திரு. பக்தவத்சலம் அதுபற்றித் துளியும் எண்ணிப் பார்த்தார் என்ப தற்கு ஒரு வகைத் தடயமும் இல்லை. அவர்க்கு ஆட்சி மொழி பற்றிக் கவலையும் இல்லை. திரு. சுப்பிரமணியம் கொண்டுவந்த கல்லூரிப் பயிற்று மொழித் திட்டத்தைக்கூடச் சரிவரச் செயல் படுத்தாமையே இவரின் நாட்டமின்மையைக் காட்டுவதாகும்.

ஊர் காவல் துறையில் இருந்து பழுத்து முதிர்ந்த திரு. பக்தவத்சலம் அவர்களின் தலைமை எவ்வகையிலும் தமிழ்க்கும் தமிழர்க்கும் நலம் பயக்கப் போவதில்லை என்பதை உறுதியாகக் கூறலாம். பொங்கிவரும் தமிழ் உணர்வைப் புரிந்து, அவர்தம் கருத்துகளை மாற்றிக் கொண்டு தமிழர்தம் நம்பிக்கைக்கும் நாட் டத்திற்கும் வழி வகுப்பாரானால், தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிலாவது காமராசர் திட்டம் ஓரளவு நன்மை பயத்தது என்று கூறலாம். இவற்றிற்கெல்லாம் மன்னார்சாமியின் மளிகைக் கடையில் உள்ள சரக்குகளின் தரம் அல்லவா உயர வேண்டும்! ஆள் மாறிப் பயன் என்ன?

*

சமற்கிருதவாக்கம்-
சொற்கள் (தொடர்ச்சி)

—*—

சமற்கிருத இரு படைகள்

1. அடிப்படை – வேத ஆரியம்
2. மேற்படை 1) *வட திரவிடம் (பிராகிருதம்)*
   2) தென் *திரவிடம் (தமிழொழிந்த பஞ்ச திராவிடம்)*
   3) தமிழ்

பிராகிருதம் என்பது, வேதக் *காலத்தில்* வட இந்தியாவில் *வழங்கிய வட்டார மொழிகள்.* பிராகிருதம் = முந்திச் செய்யப் பட்டது. சமற்கிருதம் என்பது, வேத மொழி யிலக்கணவமைதி யைப் பெரும்பாலும் தழுவி, அம் மொழியொடு பிராகிருதத்தை யும் திரவிடத்தையும் (தென் திரவிடம்) தமிழையும் கலந்து செய்த *அரைச் செயற்கையான* இலக்கிய நடைமொழியாகும். *சமற்கிருதம் = நன்றாய்ச் செய்யப்பட்டது.*

பிராகிருதம் என்னும் சொல் பாகதம் என்றும்; சமற்கிருதம் என்னும் சொல் *சங்கதம், சனுக்கிரகம்* அல்லது *சானுக்கிரகம்* என்றும், *திரியும்.*

பிராகிருதம் சமற்கிருதத்திற்கு முந்தியதென்பது அதன் பெயராலும் மொழியாலும் தெளிவாய்த் தெரியினும், சமற்கிருதத் தினின்று பிராகிருதம் திரிந்ததாகப் பேதைமை மிக்க பழங்குடி மக்களையும் ஆராய்ச்சியில்லாத அயலாரையும் வட மொழியாளர் மயக்கி வருகின்றனர் அதற்குக் கரணியம் (காரணம்), சமற்கிரு தச் சொற்கள் திரிந்தும் திரியாமலும் பாகதத்தில் வழங்குவதே.

எ. டு:	திரியாதவை	திரிந்தவை
	சஷ்டி (sashti)	சட்டி (satthi)
	தர்ம (dharma)	தம்ம (dhamma)

மொழிப்பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

திரிந்து வழங்குவன, தமிழில் வழங்கும் திட்டாந்தம் (த்ருஷ்டாந்த), சோத்தம் (ஸ்தோத்ர) என்னும் வடசொற்கள் போன்றவையே. அவை யாவும் அடிப்படைச் சொற்களல்ல. பிராகிருதத்திற்கும் அடிப்படை தமிழே. ஆயினும், அது விளங்கித் தோன்றுதவாறு அத்துணை வட சொற்கள் அதிற் கலந்துள்ளன. வடசொற் கலப்பு தமிழில் இருப்பதைவிடத் திரவிடத்தில் மிகுதியாகவும், திரவிடத்தில் இருப்பதைவிடப் பாகதத்தில் மிகுதியாகவும், இருக்கும். வடக்கே செல்லச் செல்ல வடசொற் கலப்பு மிகும் என அறிக வேத ஆரிய மொழி வழக்கற்றுப் போனதனல், அது பழங்குடி மொழிகளிற் கலந்து புல்லுருவியும் உண்ணியும் பேனும்போல் மேலுண்ணியாய் (Parasite) இருந்து வருகின்றது. ஆரியச் சொல் வேரூன்றியவுடன் அதற்கு நேரான தென்சொல் வழக்கற்றுப்போம். வழக்கற்ற சொல் இலக்கியத்தில் இடம் பெருவிடின் மறைந்து மீளாநிலை யடையும்.

பிராகிருதம் என்னும் வடதிரவிடத்திலுள்ள தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் ஈறுதிரிந்தே வழங்கும்.

எ. டு:	தமிழ்	பிராகிருதம்
	அச்சன்	அஜ்ஜ
	அத்தை	அத்தா
	ஏழகம்	ஏளக
	ஐயன்	அய்ய
	கட்டை	கட்ட
	கம்பம்	கம்ப
	நேயம்	நேயம்
	வட்டம்	வட்ட

பிராகிருத வழிப்பட்ட மொழிகளுள் ஒன்ருன இந்தியின் அடிப்படையும் தமிழே.

எ. டு:	தமிழ்	இந்தி
	அம்மா	மா
	ஆம்	ஹாங்
	இதோள் (இங்கே)	ஹிதர்
	உதோள் (உங்கே)	உதர்
	உம்பர்	ஊப்பர்

தமிழ்	இந்தி	தமிழ்	இந்தி
கால் (கருமை), காள்	காலா	நேரம்	தேர்
		நோக்கு	தேக்(கு)

கொச்சு	குச்(சு)	படி(கீழிரு)	பைட்
செல்	சல்(ch)	படி(வாசி)	பட்
சிட்டு(சிறு)	சோட்டா(ch)	படு(பெரிய)	படா
தண்	தண்டா	பழம்	பல்
தத்தை	தோத்தா	புகல்	போல்(b)
தா	தே	வத்து(தெலுங்கு)	மத்

சமற்கிருதத் திரவிடச் சொல் முந்திய கட்டுரையில் எடுத்துக் காட்டப்பட்டது.

சமற்கிருதத் தமிழ்ச் சொற்கள்

சமற்கிருதச் சொற்களெல்லாம், கீழ்ப்படையும் மேற்படையும் பற்றி,

1) பழஞ்சொல்,
2) புதுச்சொல் என்றும்;

மொழி வகை பற்றி,

1) ஆரியச் சொல்,
2) தமிழ்ச் சொல் என்றும்;

வேர்ப் பொருட் கரணியம் உண்மையும் இன்மையும் பற்றி,

1) கரணியக் குறி,
2) இடு குறி என்றும்;

இவ்விரு பாலாய்ப் பகுக்கப்படும்.

பழஞ் சொல் 'என்பன வேத ஆரியம். இடு குறிகள், 'ஆனந்த பைரவி', 'கலியாணி', 'சங்கராபரணம்', 'தன்னியாசி', 'நாத நாமக் கிரியை', முதலிய பண்ணுப் பெயர்கள் போன்றவை.

தமிழ்ச் சொற்கள் பின் வருமாறு மூவகையாய் வகுக்கப் பெறும்.

(1) முழுச்சொல்: எ. டு: அகவு, தூது.
(2) வேர்ச்சொல்: ,, பண்–பாணி(கை), மன்–மநு.

முன்னுதல் = கருதுதல். முன்–முன்னம்–முனம்–மனம். மூன்–மன் (Man)= சிறப்பாகக் கருதும் உயிரினம் மன்பதை ≐ மக்கட் கூட்டம்.

(3) புனைசொல்: எ. டு. அனுமானம், கும்பகாரன், ஆதா, அல்லுதல் ≈ பொருந்துதல், பொருத்துதல், பின்னுதல். முடைதல்.

அல்–அன்–அனு = கூட.

மன்–மான்–மானி-மானம் = அளவு, படி, மதிப்பு, கருத்து, பெருமை. மன்னுதல் = பொருந்துதல். மானுதல் = ஒத்தல். *மானித்தல் = ஒப்பிட்டளத்தல் அல்லது பொருத்தியளத்தல்.* மான்-மா = ஓர் அளவு.

கும்–கும்பு–கும்பம் = குவிந்த கலம்.

கடு–கடி–கரி–காரம்–காரன். காரம் = மிகுதி, வலிமை, உரிமை. காரன் = உரியவன்.

ஆ என்பது ஓர் எதிர்மறை யிடைச்சொல். தா = கொடு. ஆதா = எடு.

அவமானம், அனுமானம், உபமானம், சன்மானம், நிர்மாணம், பிரமாணம், பரிமாணம் முதலிய பல சொற்கள் மானம் என்னும் தமிழ்ச் சொல்லை வருமொழியாகவும் ஈருகவுங் கொண்டவை.

தமிழ்ச் சொல் திரிப்பு முறைகள்.

மூவகைத் திரிபு

(1) தோன்றல்

பல தமிழ்ச் சொற்கள், முதலலியல் ரகரமிடைச் செருகியும் வகரமிடைச் செருகியும் வடசொல்லாக்கப்பட்டுள.

எ. டு: ர: *தமிழ்-த்ரமிள-த்ரமிட-த்ரவிட, திடம்-த்ருட, தூணி–த்ரோண, தோணி-த்ரோண,* படி--ப்ரதி, படிமை-ப்ரதிமா, பதிகம்-ப்ரதீக, பவளம்-ப்ரவாள, புட்டம்-ப்ருஷ்ட, புடவி--ப்ருத்வீ, மதங்கம்-ம்ருதங்கம், மெது–ம்ருது, வட்டம்-வ்ருத்த.

வ: *சுரம் - ஜ்வரம், சொம் (சொத்து)* - ஸ்வாம், *சொலி* - ஜ்வலி

சுள்–சுர்–சுரம்.

சுல்-சுள்–சுள்ளை-சூளை, சுல்-சுல்லி = அடுப்பு

சுல்–சொல்–சொலி. சொலித்தல் = எரிதல், ஒளிர்தல்.

சொல் = ஒளிரும் பொன் போன்ற நெல்.

(2) திரிதல்

உயிர்த்திரிபு (சில)

ஆ–ஐ: வடை–வடா, மாலை–மாலா, கலை–கலா.
இ–ஈ: புரி–புரீ, குடில்–குட்டீர.
உ–அ: குடம்–கடம், சும்–சம் (அமைதியாயிரு).
எ–ஏ: பெட்டி–பேட்டீ
ஏ–ஈ: பே (அஞ்சு)–பீ (bhi).
ஐ–அ: மலையம்–மலய, வளையம்–வலய.
ஒ–ஏ: ஒக்க–ஏக்க (ஒன்று.)

மெய்த்திரிபு

க: க–ஜ: பகு–பஜ்.
க–ஹ: பெருகு–ப்ருஹ் (bh)
க்க–க்ஷ: பக்கம்–பக்ஷ.

ச: ச–ch: சல்–சலி–chal.
ச–ஷ: பேசு–பாஷ் (bh)
ச–ஜ: முரசு–முரஜ.
ச–க: சீர்த்தி–கீர்த்தி
ச்ச–க்ஷ: அச்சு (axle)–அக்ஷ

ட: ட–ஷ: மாடை–மாஷ
மாடு = செல்வம், பொன். மாடு–மாடை = ஒரு பொற்காசு.
ட–ர: மடி–மரி–ம்ரு.
ட–ண: படம்–பணம்
ட–த: கடம்பு–கடம்பம்–கதம்ப
ட்ட–த்த: நடம்–நட்டம்–ந்ருத்த
ட்ட–ஷ்ட்ட: விட்டை–விஷ்ட, முட்டி–முஷ்டி.

த: த–ச: திரு–ச்ரீ (ஸ்ரீ).
த–ஜ: விதை–பீஜ
த–ஸ: மாதம்–மாஸ
த்த–க்த: முத்து–முத்தம்–முக்த
த்த–த்ய: நித்தம்–நித்ய

நில்–நிற்றல் = நிற்கை, நிலை. நிற்றலும் = நிலையாக, என்றும். ''குணபத்திரன்ருள் நிற்றலும் வணங்கி'' (சூடா.7,76). நிற்றல்–நித்தல் = என்றும்.

''நித்தல் பழி தூற்றப் பட்டிருத்து'' (இறை. கள. 1,14).
''நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே''
(சிலப். உரை பெறுகட்டுரை, 4).
நித்தல்–நித்தலும் = என்றும்.
''உமை நித்தலுங் கை தொழுவேன்'' (தேவா. 825, 1).
நித்தல்-நிச்சல் = என்றும்.
''நிச்சலேத்து நெல்வாயிலார் தொழ'' (தேவா. 21, 3).
நிச்சல்–நிச்சலும் = என்றும்.
''நிச்சலும் விண்ணப்பஞ் செய்ய''
(திவ். திருவாய். 1,9,11).
நித்தல்–(நித்தன்)–நித்தம் = என்றும்.
''நித்தமணாளர் நிரம்பவழகியர்'' (திருவாச. 17,3).
நித்தக்கட்டளை, நித்தக்காய்ச்சல் என்பன உலகவழக்கு.

ண: ண–ஷ: உண்ணம்–உஷ்ண
உள் - ஒள் - ஒளி. உள் - உண் - உண - உணங்கு - உணக்கு.
உண்–உண்ணம் = வெப்பம்.
''உண்ண வண்ணத் தொளிநஞ்சமுண்டு''
(தேவா. 510, 6).

ந: ந–ல. நோக்கு-லோக்(கு).

ம: ம–ஸ. மனம்–மனஸ்.

ன: ன–த: திருமான்-ஸ்ரீமத்
ன்ன-ர்ண: கன்னம்–கர்ண
கல்-கன்-கன்னம் = துளையுள்ள காது, குழிவிழும் அலகு

ய: ய–ச: காய்–காச்.
காய்தல்–எரிதல், சுடுதல், ஒளிர்தல், விளங்குதல்.
ய. த: தயிர்–ததி (dh).

ல: ல–த: சீலம்-சீத
ல–ர: கலுழன்-கருட (செம்மையும் வெண்மையும் கலந்த பருந்து வகை)
கல்–கலுழ்-கலுழன். கலுழ்தல் = கலத்தல்.
ல–ன: நாலா-நானு

வ: வ-ப: உவமை–உபமா
வ-க: சொலவம்-சுலோக

ழ:	ழ-ட:	நாழி-நாடி
	ழ-ஷ:	மேழம்-மேஷ, மேழகம்-மேஷக. முழுத்தல் = திரள்தல். முழு-முழா-மிழா-மேழம்-மேழகம்-ஏழகம் = செம்மறியாட்டுக் கடா, ஆடு.
	ழ-ல:	பழம்-பலம்
ள:	ள-ஷ:	சுள்-சுஷ்.
	ள-ல:	வளையம்-வலய

சமற்கிருத வல்லின வொலிகளுள் ஒவ்வொன்றிற்கும், கடுத்தும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் ஒலிக்கும் நந்நான்கு வகையிருப்பதால், சில தமிழ் வல்லெழுத்துக்கள் வட மொழியில் பல் வேறெழுத்துக்களாய்த் திரிகின்றன.

எ.டு:	சாய்:	சாய்-சா-சாவு-சவம்-சவ; சாய்-சய்-சயனம்; சாயுங்காலம்-சாயங்(காலம்)-ஸாயம்; சாய்-சாயை-சாயா (ch).
	பகு:	பகு-பஜ் (bh), பாகம்-பாக (bh); பக்கம்-பக்ஷ (p).

(3) கெடுதல்

பட்டம்-பட்ட

அறுவகை வேறுபாடு

வலித்தல்:	அம்பு-அப்பு. அம்=நீர். அம்-ஆம் = நீர். அம்-அம்பு = நீர்.
மெலித்தல்:	மத்து-மந்த (Mantha).
நீட்டல்:	குமரி-குமாரி.
குறுக்கல்:	வாரணன்-வருண வார்-வாரணம் = கடல். வாரணன் = கடல் தெய்வம்.
விரித்தல்:	மாணவன்-மாணவக
தொகுத்தல்:	அருந்து-அத்.

முக்குறை

முதற்குறை:	அரங்கம்-ரங்க
இடைக்குறை:	மந்திரம்-மந்த்ர
கடைக்குறை:	சவி-சல்

மும்மிகை

முதன்மிகை: தூண் - தூணம் - ஸ்தூண.
இடைமிகை: அப்பம் - அபூப
கடைமிகை: உம்பர் - உபரி, மயில் - மயூர.

மூவொட்டுக்கள்

முன்னொட்டு: ஆயிரம் - அஸ்ர - ஸகஸ்ர.
இடையொட்டு: —
பின்னொட்டு: வடவை - வடவாமுக
முறை மாற்று நீட்சி. *அரசன் - ராஜன்*
உருவம் - ரூப (p)
மரூஉ *சாயுங்காலம் - சாயம்*
சிதைவு புடலங்காய் - பட்டோலிக்கா
புழல் = உட்டுளை. புழல் - புடல் = புழலான காய். புடல் - புடலை.
மொழி பெயர்ப்பு புள் - *சகுன*, நிலை - *ஸ்தாய்.*
சகுன = பறவை. ஸ்தா = நில்.

ஏமாற்று வகைகள்

ஆயிரக்கணக்கான தமிழ்ச்சொற்களும் திரவிடச் சொற்களுமான தென் சொற்கள் வட மொழியிலிருக்கவும், அவற்றையெல்லாம் வடசொல்லெனக் காட்ட வேண்டிப் பல்வேறு ஏமாற்று முறைகளைக் கையாண்டு வருகின்றனர் வட நூலார்.

அம் முறைகளாவன:-

(1) தவற்றுப் பிரிப்பு

எ. டு:

தமிழ்	வடமொழி
உவணம் - சுவணம்	சு + பர்ண
அகவு	ஆ + ஹ்வே
அலத்தகம்	அ + லக்தக
நிலை - நிலையம்	நி + லய

(2) தவற்றுப் பொருட் கரணியங் கூறல்

எ. டு:

சொல்	உண்மைக் கரணியம் (தமிழ்)	தவற்றுக் கரணியம் (வடமொழி)
அரசன்	அரணுனவன், பாதுகாப்பவன் (அரவு - அரசு)	விளங்குபவன் (rang ranj)

சொல்	உண்மைக்கரணியம் (தமிழ்)	தவற்றுக் கரணியம் (வடமொழி)
குமரன்	திரண்ட இளைஞன் (கும்-குமர்-குமரன்)	எளிதாய் இறப்பவன் (கு + மார); விரும்பப்படுபவன் (கம்).
சிவன்	செந்நிறத்தான் (சிவ-சிவம்-சிவன்)	எல்லாவுயிர்களும் இருத்தற்கிடமானவன் (சீ), நன்மைசெய்வன் (ச்வி).
பல்லி	(சுவரிலும் மரத்திலும்) ஒட்டிக்கொண்டிருப்பது. (புல்-புல்லி-பல்லி)	சொல்லுவது (பல்).
பாண்டியன்	பழையன் (பண்டு)	பாண்டவன் (பாண்டு).
மீன்-மீனம்	மின்னுவது (மின்)	இறப்பது, திரிவது (மீ)
வடவை	வடமுனை நெருப்பு (வடம்)	பெட்டைக்குதிரை முகத்தில் தோன்றுவது (வடவா முகம்).

குறிப்பு:- சிவம் என்னும் சொற்கு நன்மைப் பொருள் தமிழிலும் உண்டு. செம்மை = நன்மை.

(3) தவறுக மூலங்காட்டல்

எ.டு: சொல்	உண்மையானமூலம்	தவறுன்மூலம்
கமலை-கவலை	நீரிறைக்கும் ஆலை, பயிர்த்தொழில் ஆலை. (கம் + ஆலை).	ஆவை (பசுவை)ப் பூட்டியிறைக்கும் ஏற்றம் (கபிலை).

அவிழ் = அவிந்த சோற்றுப் பருக்கை, சோறு.
அவிழ்-அவிழ்து-அமிர்து-அமுது = சோறு.

மருவுதல் = தழுவுதல். மரு-மார் = நெஞ்சு, முலை. மார்-மார்-மார்வு-மார்பு-மார்பம். மரு-மருமம்-மம்மம்-அம்மம் = முலை, முலைப்பால். அம்மம் - அமுது - அமிழ்து - அமிழ்தம் = பால். அமிழ்து-அமிர்து-அமிர்தம் = பால்.

சோறு என்று பொருள்படும் அமுது என்னும் தமிழ்ச் சொற்கும், பால் என்று பொருள்படும் அமுது என்னும் தமிழ்ச் சொற்கும், அம்ருத என்னும் வட சொல்லை மூலமாகக் காட்டுவது முற்றுந் தவறும்.

(4) தவறுகத் தொடர்பு படுத்தல்

பல தமிழ்ச் சொற்கள், ஒரு மருங்கு வடிவொப்புமைபற்றியும் பற்றுதும், வட சொற்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன.

எ. டு: தமிழ்ச்சொல்	வடசொல்
அச்சன் (அத்தன்) = தந்தை	ஆர்ய = ஆரியவரணத்தான்
ஆசிரியன் (ஆசு + இரியன்) = குற்றத்தைப் போக்குவன்.	ஆச்சார்ய (ஆ + சார) = ஒழுக்கத்தைக் கற்பிப்பவன்.
ஐயன் (ஐ + அன்) = பெரியோன்.	ஆர்ய = ஆரிய வரணத்தான்.
கம்பம் (கம்பு + அம்) = உயரமான பெரிய கம்பு.	ஸ்தம்ப(ஸ்தம்ப்) = ஊன்றிய தூண்.
கேரளம் (சேரல்-சேரலம்-கேரளம்) = சேர நாடு, மலையாள நாடு.	நாளிகேரம் (= தென்னை) மிகுந்திருக்கும் நாடு.
பார்ப்பான் = நூல்களைப் பார்ப்பவன்.	பிராமணன் = பிரமத்தை அல்லது பிராமணத்தை அறிந்தவன்.

குறிப்பு:- பார்ப்பனன் என்னும் வடிவில் 'அனன்' (அன் + அன்) என்பது ஈறு. வினையாலணையும்பெயர்க்கு மூலமான வினை முற்று 'ஆன்' ஈறு போன்றே 'அனன்' ஈறும் கொள்ளும்.

எ. டு: இ. கா.	நி. கா.	எ. கா.
வந்தனன்	வருகின்றனன்	வருவனன்
வந்தனள்	வருகின்றனள்	வருவனள்
வந்தனர்	வருகின்றனர்	வருவனர்
வந்தன்று	—	—
வந்தன	வருகின்றன	வருவன

வந்தன்று என்பது வந்தனது என்பதன் திரிபாம்.

(5) தலைகீழ்த் திரிப்பு

தமிழ் >	பிராகிருதம் >	சமற்கிருதம்
வட்டம்(வள்)	வட்ட	வ்ருத்த
மேழகம்-ஏழகம்.	ஏளக	ஏலக
நேயம்(நெய்)	நேயம்	ஸ்நேக(ஸ்நிக்)
மாதம்(மதி)	—	மாஸ

இவற்றைத் தலைகீழாகத் திரிப்பது வடநூலார் இயல்பு.

(6) வலித்துரைத்தல்

இருமொழிகள் குறுகிய காலத்தில் அடுத்து வழங்கினும், ஒன்றினின்று இன்னொன்று ஒருசில சொற்களையேனும் கொள்ளாதிராது. வடமொழி தென்மொழியொடு தொடர்புகொண்டு மூவாயிரம் ஆண்டிற்குமேலாயினும், அதிற் கலந்துள்ள ஆயிரக்கணக்கான தென் சொற்களுள் ஒன்றையேனும் தென் சொல்லென

ஒப்புக்கொள்ளாது வட சொல்லேயென வலிப்பது, இன்றும் வட மொழியாளர் இயல்பாயிருந்து வருகின்றது. வட மொழியிலுள்ள தென் சொற்கள் ஐந்திலிரண்டு பகுதியாகும்.

(7) தேவமொழியெனல்

வேத ஆரியர், பழங்குடி மக்களான பண்டைத்தமிழரின் பேதைமையையும் மதப் பித்தையும் அளவிறந்து பயன்படுத்தி, தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றும், தம் முன்னோர் மொழியான வேத ஆரியத்தையும் அதன் வழிப்பட்ட சமற்கிருதத்தையும் தேவமொழியென்றும் சொல்லித் தமிழர் அதை முற்றும் நம்புமாறு செய்துவிட்டதனால், தமிழில் அளவிறந்த வடசொற்கள் வேண்டாது கலக்கவும், அதனால் அது தன் வளங் குன்றித் தூய்மையிழக்கவும், வழிபாட்டிற்குத் தகாததென்று தள்ளப்படவும், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் தமிழர் தம்மைத் தாழ்த்திக் கொள்ளவும், நேர்ந்ததென அறிக. *

அடுத்த இதழில்

பாவாணர் எழுதும் 'நடைமுறைச் சொற்பட்டி'யும்

சமற்கிருதவாக்கம்-எழுத்து

என்ற அரிய மொழியாராய்ச்சிக் கட்டுரையும் இடம்பெறும்.

தமிழே வெற்றிபெறும்.

ஆங்கிலமாயினும், வேறு எந்த வேற்று மொழியாயினும் தென்னாட்டவர் வாழும் எந்தப் பகுதியிலும் பொது மொழியாகும் வாய்ப்பைப்பெறும் என்பதற்குச் சிறிதும் இடமில்லை. நூற்பெருக்க முடையதும், சொற்செலவு மிக்கதும், போற்றி வணங்கப் படுவதும், சமயத் தலைமைப் பணியாற்றும் இனத்தவர் வழங்கும் மொழியாகவுமுள்ள சமற்கிருதத்தைச் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக உறுதியுடன் எதிர்த்து நின்று தற்காத்துக் கொள்ளும் தமிழ்மொழி வேறுஎத்தகைய மொழியின் தாக்குதலையும் புறங்காணச் செய்து வெற்றி வாகை சூடும் என்பது தேற்றம். — கால்டுவெல்.

நன்றி!

உணர்வு பொங்கும் உள்ளத்தோடு தென்மொழியின் வளர்ச்சிக்காக திரு. எம். சி. சீனிவாசன் (சென்னை-34) அவர்கள் உருபா ஐந்தும், திரு. மகிபை – பாவிசைக்கோ (சென்னை-13) அவர்கள் உருபா ஐந்தும் நன்கொடையாக உவந்தளித்தனர். அவர்கட்கு எம் நெஞ்சுகந்த நன்றி.

ஆங்கில மொழியாக்கம்

Give Them All!

Those who love you dearly,
And those on whom you shower your love,
And your kith and kin
Whose myriad virtues shine,
Your neighbours who in times of want
Have fed your hungry kindred-folk
Give them all, the wealth, my wife
Give it to one and all.
Make no distinction; make no choice;
Be free with gifts; consult me not
Desire not to lead a prosperous life
But distribute the wealth to all!
For, the ruler of the fruit-rich Mudira Hills
Our shapely-speared Kumanan
Has showered on us his copious wealth.

PURAM: 163
Sung By: PERUNCHITHIRAN.

எல்லோர்க்கும் கொடுமதி...!

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே,
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே!

(பெருஞ்சித்திரனார் பாட்டு. புறம்: 163.)

மொழி பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.



எண்சுவை எண்பது.

4. அவலம்.

கள்ளே கனிவாய்! கயலே மணிவிழி!
எள்ளே மலர்நாசி! ஏகினள்! அவள்வளர்க்கும்
புள்ளே அவள்வழியிற் போ! (1)

---

4. அவலம்.

மகள்பிரிவால் நோயுற்று, உள்ளங்கவன்ற தாய், படுந்துன்பங் கூறியது அவலம் என்க. அவலம்–துன்பம்.

1) மகள் பற்றி, எண்ணி யுழன்ற தாய், அவள் விரும்பிய பொருள்களைக் காணுங்கால் வருந்துவள் என்பது இயல்பாதலின், அவளொடு மிகுவாய்ப்பழகிய–அவள் அன்பொடு வளர்த்த கிள்ளை முதலிய உயிர்களைப் பார்க்குந் தோறும் வருத்தம் நிகழ்வதாயிற்று. அவள் வளர்த்த கிளி, அவள் பயிற்றிய சொற்களைச் சொல்லுங்கால், அது கேட்டு அவள் நினைவு கொழுந்து விட்டெரிதலும், அக்கிள்ளை அவ்வாறு அடிக்கடி நினைவூட்டி வருத்துதல் தாளாது அதனிடம் உரைத்ததாக இதனை முன் கூறப்பட்டது.

துரை-மாணிக்கம்

நீலக் குயின்மொழி! நெற்றியே வான்வில்!பூஞ்
சோலைக் குழல்முகில்! சூழுமிளங் காலையிலே
கோலமுனக் குண்டோ குறடு? (2)

பகலிரண்டு; மூன்றிரவு; பாலருந்து பூசை!
அகல்நெடுங்கண் இல்லை; அருந்துகனி கிள்ளை!
மகள்வாராள் புல்லுண்பாய் மான்! (3)

கனி வாய் கள்ளே என்றும், **மணி விழி** கயலே என்றும் நாசி எள் மலரே என்றும் கூட்டுக. மகளின் அழகு நலன் களை எண்ணினுள் என்க. "இவ்வாருன தன் மகளே போயினள்; அதுபற்றிக் கவல்கின்றேன்; அவ்வருத்தம் மிகைப்படுமாறு நீ தொல்லை தராதிருக்க, நீயும் அவள் வழி யிலேயே போ" என்று கிள்ளையிடம் கூறியவாறு, **புள்ளே அவள் வழியிற் போ** – என்ருள்.

அவள் வளர்க்கும்–என்றது, இனி யான் வளர்க்க இய லேன் என்பதும், அவளன்றி நீயும் வளராய் என்பதும் தோன்றக் குறித்தது. இது தன் வருத்தம் தீரப், பிற உயிரை வெறுத்தது.

2) நீலக் குயில் பேசுவது போன்ற மொழி என்றும்,வான்வில் போன்ற நெற்றி யென்றும், பூஞ்சோலை மேவும் முகில் போன்ற குழல் என்றும் உவமைத் தொகைத் தொடராகக் கொள்க. தன் மகள் இளங்காலையிலே கூட்டிப் பெருக்கிக் கோலமிடுந் தன்மையள் என்பதும், இனி அவ்வகை அழகின்றி வெறுநிலமாய், என்போற்கிடப்பை என்றும், குறட்டை நோக்கிக் கூறினன் என்க.

3) பகலிரண்டு மூன்றிரவு–என்றது இரண்டு முழுநாட்களும் ஓர் இரவும் ஆகும். இதனல் மகள் தாயைப் பிரிந்தது முதல் நாள் இரவில் என்பது குறித்தது.

பூசை–பூனை.

வருந்துந் தாய், தன்போல் யாவரும் வருந்துவர் என்று மயங்குவள் என்பதியற்கை யாதலின், தான் உண்ணுதது போலப் பூனைமுதலிய உயிரிகளும் உண்ணுதிருக்குமென்று கருதி உரைத்தாள் என்க. **பூசை பாலருந்து** என்றும், **கிள்ளை கனி அருந்து** என்றும், **மான் புல்லுண்பாய்** என்றுங் கொண்டு கூட்டுக. இனி மகள் அன்பு தோன்றப் பூனையையும், அவள் பேச்சு தோன்றக் கிளியையும்,

'நறுந்தோகை நண்ணுவள் நண்ணிமருங் கொடியப்
பறந்தோடி நீர்கொணர்வள் பைங்கொடி'யென் றெண்ணல்;
குறுந்தொடிகை தூக்குங் குடம். (4)

நறவணையும் வாய்முத்தம் நாடுவையோ? நாடிச்
சிறகணையும் நற்றுயிலுஞ் சேர்வாயோ? என்றன்
புறவணையும் மாடப் புறவு. (5)

இலைவிரிக்கும் பூங்கை இனியென்று காண்பன்;
தலைவிரிக்கும் மென்விரல்கள் தம்மையெவண் காண்பன்;
கலைவிரிக்குங் கட்படுமோ கண்? (6)

அவள் மருட்சி தோன்ற மானினையும் கூறினள் என்க. இனித், தன் மகள் வீட்டில் வளரும் பூனையாயிருந்து, பறந்து செல்லும் கிளியாகி, காட்டில் மேயும் மானுயினள் என்றும் முறைமை யடுக்கிக் கூறினள் என்றும் கண்டு மகிழ்க.

4) இது அவள் நீர் கொணருங் குடங்கண்டு கவன்றது. நண்ணுவள்–அடைவள்; நெருங்குவள்.

நண்ணுவள் நறுந்தோகை–என்றது அவள் மயில்போல் சாயல் தோன்ற வருதலும், பறந்தோடி மருங்கொடிய நீர் கொணர்வள் பைங்கொடி–என்றது கொடி போன்ற இடை வைப்பள் என்பதும் புலப்பட வேண்டி.

எண்ணல்–எதிர் மறை வினை முற்று–எண்ணுதே. புறத் தோற்றம் இழந்த அன்னை, அகத் தோற்றங் கண்டு மகிழ் வாளியற்கையின், மயிலும், கொடியும் நினைவு கொண்டாள் என்க வெறுங்கையால் தூக்கும் குடம் பெருமை யிழக்கு மாதலால், குறுந்தொடியணிந்த கையால் தூக்கும் பெருமை சான்ற குடம் என்றனள்.

5) இஃது அவள் கொஞ்சும் மாடப்புறவை நோக்கிக்கூறியது. புறவை அணைத்து முத்தம் தருதலும், அவள் மார்பில் அது சிறகணைந்து துயிலலும் இனி இல்லையாதலால், இவை தவிர, மற்றபயன் தன்னுல் உண்டென்றும் கவன்றுகூறியது. என்றன் புறவணைக்கும் மாடப் புறவு–என்றது, உன்னை எவ்வளவு விருப்போடு அணைப்பாளோ, அந்தவிருப்போடு நான் அவளை அணைத்து வளர்த்தேன் என்ற குறிப்புத் தோன்றக் கூறினுள் என்க. நறவணையும் வாய் – தேன் ஊறும் வாய்.

6) தன் மகள் தனக்கு வாழையிலை விரித்து உணவு படைத்த நிகழ்ச்சியையும், தன் மென் விரல்களால் தன் தலை கலைந்த

இடிவைத்தாள் நெஞ்சில்! இணைவைத்தாள்! கானிற்
கடிவைத்தாள்; இற்றைநீ ஆர்வைக்கப் பூத்தாய்,
கொடிவைத்த முல்லைக் கொடி? (7)

குயில்வந்து கூவாதே! கோதைநடை காட்டிப்
பயில்கூத்து மேவாதே; பாவைநினை வேனோ?
மயில்வளர்த்த பச்சை மயில்! (8)

காட்சியையும், அவள் உரையாடி மகிழுங்கால் அவள் கண்கள் விரிக்கின்ற கலை இன்பத்தையும் இனி என்று காண்பது என எண்ணி வருந்தினள் என்க.

வாழையிலை மென்மை யாதலின், அதைவிட மென்மை யானது அவள் கை எனக் குறிக்கப் பூங்கை என்றாள்; இலையினும் பூ மென்மையாதல் பற்றி.

கலை விரிக்கும் கண் படுமோ, கண்–கலையை விரிக்கின்ற அவள் கண், தன் கண் முன் எதிர்ப்படுமோ?

7) இஃது, அவள் வைத்து வளர்த்த முல்லைக் கொடியைக் கண்டு கூறியது.

இணை வைத்தாள் – தனக்கென்று ஓர் இணையை (துணையை) வைத்துக் கொண்டாள். என் நெஞ்சில் இடியையும் தன் நெஞ்சில் இணையையும் வைத்தாள் என்றபடி.

கானிற் கடிவைத்தாள், இற்றை நீ ஆர் வைக்கப் பூத்தாய் முல்லைக் கொடி–என்றது, அவள் முல்லை மலர்ந்து மணக்கும் காட்டிற்கே சென்றாள் இனி நீ இங்குப் பூத்தலிற் பயனில்லை என்றபடி. இனி, என் மகள் நின்னை வளர்த்தது போல் நான் அவளை வளர்த்தேன்; அவள் மலர்ந்தபின் மாற்றான் பின் போயினள். நீயும் பூத்தல் செய்யாதே. வேறு எவராகிலும் கவர்ந்து செல்வர் என்று கூறினள் என்க.

கொடி வைத்தது–என்றது தன் மகள் வைத்து வளர்த்தது என்பதுணர்த்த.

8) கூவுங்குயில் அவள் போற் குரலுடைய தாகலின் அதனைக் கூவாதே என்றாள். மயில், தன் கோதையின் நடை காட்டிப் பயிலும் கூத்து, அவளை நினைவு படுத்துதலால், அதனைக் கூத்து மேவாதே என்றாள். கோதை–மயில் தோகை

மயில் வளர்த்த – மயில்போன் என்மகள் வளர்த்த.

மறந்தாள் மகளென்னை; மற்றியென் எண்ணந்
துறந்தாள்; இனியொன்று, தோகைசெவி கேட்கும்
'இறந்தாளும் அன்னையிவண்' என்று. (9)

வேட்டாளோ? கேடில்லை; வேற்றுனை விட்டெண்ண
மாட்டாளோ? கேடில்லை; மற்றுமணம் பற்றியெமைக்
கேட்டாளோ? இல்லை;யது கேடு! (10)

---

9) மறவாவிடில், தன்னைத் துறவாள் என்றதால் முதற்கண் **மறந்தாள் மகளென்னை** என்றாள். என்னைத் துறந்தாலும் மீண்டுமொருகால் வந்தாலும் வருவாள்; ஆனால் என் எண்ணத்தையே துறந்தாள் என்று குறிக்க **என்னெண்ணந் துறந்தாள்** என்றாள். இனி, **'இறந்தாளும் அன்னை இவண்'** என்ற சொல் ஒன்றுதான் அவள் செவி கேட்க வுளது என்று கூட்டுக அவ்வாறு அவள் கேட்பினும் உளத்தே வருந்தாள் என்பது குறிக்க **'செவியால் மட்டும்** கேட்பாள் என்றாள். அதுவும் அவள் விரும்பிக் கேளாது அவள் **செவி மட்டும் தானே கேட்கும்** என்றுங் குறிக்க, **செவி கேட்கும்** என்றாள்.

10) வேட்டாள் – விரும்பினாள்.
அவள் தனக்கொரு காதலனை விரும்பினாளென்பது தவறில்லை – அஃது இயல்பாதலின்.
அவள் விரும்பிய புதியவனை விட்டு, மற்றவரை எண்ண மாட்டாளென்பதுந் தவறில்லை – அவனையே எண்ணி, இருந்து, அவன்பாலே கொண்டு, கொடுத்து, வாழலே இல்லறமாதலின். ஆனால் மணம்பற்றித் தமையொரு சொல் கேளாது விட்டாளே அதுதான் கேடு – அதனால் அவள் வீட்டை விட்டு வெளிச் செல்லல் நிகழ்ந்ததும், துன்பம் வந்துற்றதும், பழி மேவுற்றதும் நேர்ந்தன வாகலின் அது கேடு என்றாள்.

விரும்புவது அவள் உள்ளத்திற்குள்ளேயே அடங்கும் என்பதால் அது தவறில்லை என்பதும், அவள் தம்மை எண்ணாதது, தன்னுள்ளத்தும், அவருள்ளத்துமே அடங்குமாதலின் அதுவும் தவறில்லை என்பதும், அவள் தன்னைக் கேளாதுவெளிப் போந்ததால் ஊரார் உள்ளமெல்லாம் அச்செய்தி படர்ந்தது என்பதால் அதுவே கேடு என்றும் கொண்டாள் என்க.

கேட்டாளோ? இல்லை; அது கேடு – என்றதால் அவள் கேட்டிருந்தால், தான் மறுக்கப்போவதில்லை என்று தன் அருள் நெஞ்சம் புலப்படுமாறு கூறினாள் என்றும் கொள்க.

(தொடரும்)

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை"

பேராசிரியர். கு. சுந்தரமூர்த்தி.
(செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.)

''அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று''

இத் திருக்குறள் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது. இதன்கண் உள்ள 'அஃது' என்னும் சுட்டு எதனைக் குறிக்கின்ற தென்பதே ஈண்டைய ஆய்விற்குரியதாம்.

இக் குறட்பாவிற்கு மணக்குடவர், பரிதியார், பரிமேலழகர் ஆகிய மூவருரைகளே இப்போது கிடைத்துள்ளன. அம் மூவரிலும் மணக்குடவரும், பரிதியாரும் ஒரு கருத்தினராயும், பரிமேலழகர் வேறொரு கருத்தினராயும் உரை வகுத்துள்ளனர்.

அறனென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையே ஆகும்; அவ்வில்லறந்தானும் பிறனால் பழிக்கப்படுவது இல்லையாயின் மிகவும் நன்றாம் என்பது இக் குறளின் பொருளாகும். இதுவே மணக்குடவர், பரிதியார் ஆகிய இருவர்க்கும் கருத்தாகும்.

ஆனால், பரிமேலழகரோ வேறுபட உரை காண்கின்றார். அது வருமாறு:

''இருவகை அறத்தினும் நூல்களான் அறன் என்றுசிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; ஏனைத் துறவறமோ எனின் அதுவும் பிறனால் பழிக்கப்படுவது இல்லையாயின் அவ்வில் வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று என்றவாறு''

மணக்குடவரும், பரிதியாரும் 'அஃது' என்னும் சுட்டிற்கு 'அவ்வில்லறந்தானும்' எனப் பொருள் காணப் பரிமேலழகர் மட்டும் அச் சுட்டிற்கு 'ஏனைத் துறவறமோ எனின்' எனப் பொருள் காண்கின்றார்.

சுட்டுகள் யாண்டுவரினும் அதற்குமுன் குறிக்கப்பட்டுள்ள பொருளைக் குறிக்குமே அன்றிச் சேய்மைக்கண் உள்ளதாகிய பொருளைக் குறித்தல் இயல்பில்லை. இந்நிலை செய்யுள் வழக்காகிய இரண்டற்கும் ஒக்கும்.

''திருவள்ளுவர் சிறந்த மெய்யறிவு சான்ற புலவர். அவர் தம் நுண்ணறிவு வியத்தற்குரியதாகும்'' என்றவிடத்து அவர்

என்ற சுட்டு திருவள்ளுவரைக் குறிக்குமேயன்றி நக்கீரர், கபிலர் போன்ற அறிஞர்களைக் குறிக்காது. இவ்வுண்மை சிற்றறிவினர்க்கும் புலனும்.

பரிமேலழகரும்,

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''.

''நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை''.

''அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்''.

''நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்''.

எனச் சுட்டு வரும் இடங்களில் எல்லாம் அவ்வக் குறட்பாக்களில் உள்ள பொருண்மையைச் சுட்டுவதாகவே உரை கூறியுள்ளார். இவ்விடத்துமட்டும் அம் மரபு பிறழ்ந்து வேறுபடக் கூறுதற்குக் காரணம் ஏதோ இருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.

இக் குறளில் நூற்பாவிற் கேற்பப் பொருள் உரைத்தால், இல்லறம் துறவறமாகிய ஈர் அறங்களுள் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறமே எனப் பொருள்பட்டுத் துறவறத்திற்கு ஓரளவுக்கு பெருமை குன்றுகிறது எனக் கருதிய பரிமேலழகர் 'அஃது'என்ற சுட்டினால் துறவறத்தையும் வரவழைத்துக்கொண்டு இருவகை அறங்களுள் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறமேயாம் என்றும், ஏனைத்துறவறமும் பிறனால் பழிக்கப்படுவது இல்லையாயின் அதனோடு ஒருங்கு வைத்து எண்ணத் தக்கது என்றும் பொருள் கண்டு, இல்லறம் துறவறம் ஆகிய ஈர் அறங்களையும் ஒப்ப மதிப்பிடுமாறு செய்துள்ளார்.

திருவள்ளுவர் இல்லறம் துறவறம் ஆகிய ஈர் அறங்களையும் ஒப்ப மதிக்கும் பெற்றியர். இன்னும் நுணுகி ஆராய்வுழி இல்லறத்தின் முடிவாகத் துறவறம் அமைய வேண்டுமென்பது அவர் கருத்தென நன்கறியலாம். ஆதலினால்தான் 5 முதல் 24 அதிகாரம் வரையிலும் இல்லறம் கூறிய வள்ளுவர், அடுத்து 13 அதிகாரங்களில் துறவறம் கூறுகிறார். இவ்வமைப்பைக் காணுகின்றபொழுது,

''காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

எனக் கூறும் தொல்காப்பியர் மரபை முழுதும் ஒத்துக்கொண்டவ ராதலேயும் நன்கறியலாம். இங்ஙனம் இல்லறத்தின் வழிவந்த துறவினை யன்றி இல்லறத்தின் வழிவாராத் துறவினையும் வள்ளுவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தால் அறியலாம்.

இவற்றையெல்லாம் தம் மனத்தகத்துக் கொண்டமையால் தான் பரிமேலழகர் ஈண்டு 'அஃது' என்னும் சுட்டிற்குத் தாம் இதுவரை கொண்ட மரபிற்கும், பிற பிற இலக்கிய உரையாசிரியர்கள் கொண்ட மரபிற்கும் மாறுபட உரை காண்கின்றார். எனவே அவர்தம் எண்ணம் இவ்விடத்து உயர்ந்து செல்லுதலைக் காணலாமேனும், குறள் அமைப்பிற்கும் சுட்டின் இலக்கணத் திற்கும் அத்துணைப் பொருந்துவதாகத் தோன்றவில்லை.

இவ் வாய்வுரைகளையெல்லாம் ஒருங்கு நோக்குழி,

''பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே''

என்ற அருளுரையே நினைவிற்கு வருகின்றது. *

தூக்கம்!

மாந்தன் நாகரிகமற்றுக் காடுகளிலும் மலைகளிலும் திரிந்து கொண்டிருக்கையில், விலங்குகட்கும் நச்சுயிர்கட்கும் அஞ்சி இரவு நேரங்களை உயரமான இடங்களிலேயே கழித்தான். மரக் கிளைகளில் குறுக்கும் நெடுக்குமாக ஓடும் வலிந்த கொடிகளையும் நார்களையும் பயன் படுத்தித் தொட்டில் போல் அமைத்து அவற் றில் படுத்து உறங்கினான். தொங்கும்படி அமைக்கும் அப் படுக்கைக்கு 'தொங்கு' என்று பெயர்.

தொங்குவது எல்லாம் உயரத்தில் தூக்கிக் கட்டப்பட்டவை யாதலின் உயர்ச்சிக் கருத்தில் தொங்கற் கருத்தும், தொங்கற் கருத்தில் தூக்கல் கருத்தும் தோன்றின.

தொங்குதல் – தூங்குதல் – தூங்கு – தூக்கு – தூக்கம்.

சேக்கை என்னும் சொல்லும் படுக்கையைக் குறிப்பதே. இதுவும் 'சேண்' –உயர்ச்சி என்ற கருத்தில் தோன்றியதே.



(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச்சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றுல், அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — ஆசிரியர்.)

மண்ணுடல் காக்கத் தன்னுடல்..!

ஆலிவுட் திரைப்பட இள நடிகை ஒருத்தியின் நாட் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகள் வருமாறு:

திங்கட்கிழமை:...கப்பல் பயணம் நன்ருக விருக்கின்றது. கப்பலின் மேல் தளத்தில் உலாவிக் கொண்டிருக்கையில், கப்பல் தலைவரைப் பார்த்தேன். என்னை அன்புடன் உசாவி ஒரு குவளை தேநீர் கொணர்வித்துப் பருகத் தந்தார்.

செவ்வாய்:.........கப்பல் தலைவருடன் காலை முழுதும் சீட்டாட்டத்தில் கழிந்தது. என் புகைப்படம் ஒன்றினை அன்புடன் கேட்டுப் பெற்ருர்.

அறிவன்: ....அவர் என்னுடன் பெருந்தன்மையாக நடந்து கொள்வதாகத் தெரியவில்லை என்னைத் தம் விருப்பத்திற்கு இணங்க வைக்க முயற்சி செய்கின்ருர் போலும்......

வியாழன்: ....நான் அவர் விருப்பத்திற்கு இணங்காவிடில் கப்பலை எண்ணூறு பயணிகளுடனும் மூழ்கடித்து விடுவதாக அச்சுறுத்தினுர்......

வெள்ளி:..........நான் இன்றைக்கு எண்ணூறு உயிர்களைக் காத்தேன்......!

○ ○ ○

வண்டிப் பொறி..!

மிகவும் விரைவாக ஒருவர் இரும்புக் கடையொன்றில் நுழைந்தார்;

''காலந் தாழ்த்தாமல் பெரிய எலிப் பொறி ஒன்றைக் கொடுங்கள் ஐயா; வருகின்ற உந்தைப் (Bus) பிடித்தாக வேண்டும்......உம்! விரைந்து எழுங்கள்......'' என்ருர்.

கடைக்காரன் மெதுவாக, ''மன்னிக்க வேண்டும் ஐயா; இந்தப் பொறிகள் அவ்வளவு பெரியதாக வருவதில்லை...இதைக் கொண்டு வண்டிகளைப் பிடிக்க முடியாதே...! என்ருன்.

○ ○ ○

என் பணத்தையும் சேர்த்து..!

அமெரிக்காவின் பெரும் பணக்காரரான இராக்பெல்லரின் வீட்டைக்கடந்து இரண்டு யூதக்குடியேறிகள் பேசிக்கொண்டே சென்றனர். அவர்களுள் ஒருவன், ''இந்த ஆளுக்கு இருக்கும் கோடிக்கணக்கான பணம் என்னிடம் இருந்தால், நான் இவரை விடப் பெரிய பணக்காரனுக இருப்பேன்'' என்ருன். அதற்கு இன்னொருவன், ''எப்படி முடியும்? இராக்பெல்லரிடம் இருப்பதைப் போன்ற பணம் உன்னிடம் இருந்தால் அவரைப் போலத்தான் நீயும் பணக்காரனுக இருக்க முடியுமே தவிர, அவரை விடப் பணக்காரனுக எப்படி ஆகிவிட முடியும்?'' என்று கேட்டான். அதற்கு முதலாமவன், ''உனக்குத் தெரியாதா? நான் ஏற்கனவே ஓர் ஆசிரியச் சம்பளத்தை வாங்கி வருகின்றேனே .''என்று சட்டென்று விடையளித்தான்.

○ ○ ○

குளிர்ச்சியான பேட்டி..!

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக ட்ருமன் தேர்ந்தெடுக்கப் பட்டபொழுது, செய்தியாளர்கள் (Newspaper reporters) எந்நேரமும் அவரைச் சூழ்ந்து கொண்டு தொல்லை கொடுத்தனர். செய்தியாளர் கண்களில் படவே அவர் விரும்பவில்லை; பொதுவாக எல்லாச் செய்தியாளர்களையுமே அவர் வெறுத்தார்; குறிப்பாகப் பெண் செய்தியாளர்களைக் கண்டால் பிடிப்பதே இல்லை.

அன்னி இராயல் என்ற பெண் செய்தியாளர் அவரைப் பேட்டி காணப் பெரிதும் முயன்ருள். பல நாட்கள் காத்திருந்தும் பயன் கிடைப்பதாக இல்லை. பலவாறு முயன்று சமையல் காரி ஒருத்தியிடம் ட்ருமனை எவ்வகையில் பார்க்கலாம் என்று

கேட்டாள். பக்கத்தில் உள்ள ஆற்றுக்கு மிகவும் முன் காலையிலேயே அவர் நீந்தப்போவதாகவும் அங்குப் போனால் கட்டாயம் பார்க்கலாம் என்றும் அவள் சொன்னாள். ஒரு நாள் விடியலில் திருவாட்டி இராயல், ட்ருமனை அவரறியாமல் பின் தொடர்ந்து சென்றாள். அவர் ஆற்றில் இறங்கும் வரை காத்திருந்து கரையில் உள்ள அவருடைய துணிகளின் மேல் போய் உட்கார்ந்து கொண்டாள். ட்ருமனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இடுப்பளவு தண்ணீரில் குளிரில் நடுங்கியவாறு நின்று கொண்டே அவள் கேட்ட இருபது கேள்விகளுக்கும் விடை சொன்ன பின்பே, திருவாட்டி இராயல் அவர் துணிகளின் மேலிருந்து எழுந்து போனாள்.

○ ○ ○

பொறுப்பாளி..!

வழக்கு மன்றத்திற்குச் சுவையான வழக்கு ஒன்று வந்தது. நாட்டுப்புறத்து இளம் பெண்மணி ஒருத்தி தனக்கு அண்மையில் பிறந்த குழந்தைக்குப் பக்கத்து வயலின் சொந்தக்காரனான ஒரு குடியானவனே தந்தையென்று–தீர்ப்பளிக்க வேண்டுமென்று நடுவர் முன் வேண்டினாள்.

தான் அவளைப் பார்த்துப் பழகியே மூன்று மாதங்கள்தாம் ஆகின்றனவென்று குடியானவன் வழக்காடினான். அதற்கு மறுக்க முடியாத சான்றாக, தான் மூன்று மாதங்கட்கு முன்பு இராணுவத்திலிருந்து விடுபட்டு வந்த சான்றிதழையும் காட்டினான்.

எவ்வளவோ வழக்காடியும் குடியானவனே அக்குழந்தைக்குத் தந்தை என்று நடுவர் தீர்ப்பளித்தார். எல்லார்க்கும் வியப்பாக இருந்தது. இறுதியில் நடுவர் மிகவும் அமைதியாக "ஒரு பொருளைச் செய்தவனைக் கண்டு பிடிக்க முடியாத பொழுது, அதை இறுதியாகக் கையாண்டவனே அப்பொருளுக்கு முழுப் பொறுப்பாளியாகின்றான்..." என்று கூறி முடித்தார்.

○ ○ ○

அறிவிப்பு ஒலி..!

முதன் முதலாகக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த தாய் ஒருத்தியிடம் அண்டை வீட்டுக்காரி, "குழந்தையின் தொட்டிலை ஏன் இவ்வளவு உயரமாகக் கட்டியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்கவள், "ஆமாம்; அப்பொழுதுதான் நான் சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தாலும், குழந்தை தவறி விழுந்தால்கூட 'பொத்' என்று ஒலி கேட்கும்; உடனே ஓடிப் போய் எடுத்துக் கொள்ளலாம்" என்றாள்.

○ ○ ○

இலக்கிய ஆய்வு:

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

புலவர் கு. திருமேனி, பி. ஓ. எல்.
தமிழ் விரிவுரையாளர், நாட்டியற் கல்லூரி, திருச்சி.

இந்நெடுஞ்செழியன், நெடுஞ்செழியன் என்ற வேறு பல பாண்டியரினின்றும் அடைமொழிகளால் பிரித்து அறியப் பெற்ற வன். அவன் வாழ்வில் தலையாலங்கானம் என்ற இடத்தில் போர் செய்து ஆண்டுக்கொண்ட வெற்றியே அவனுக்குப் பீடும் புகழும் தரவல்லது ஆதலின் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்றழைக்கப் பெற்றான்.

இவன் வெற்றிவேற்செழியன் என்பானுக்கு மகனுவான் தந்தை இறந்தபின் தன் இளமைக் காலத்தில் அரசு ஏற்கப் பெற்றவன். இவனுடைய பீடும் பெருமையும் அறியாமல் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் இளைஞன் என்று சுட்டி இகழ்ந்ததோடு அமையாது, தம்மை வியந்து அவனைத் தோற்கடித்துக் கொள்ளையிடத் துணிந்தனர். அப் பொழுது இப்பாண்டியனையும் அவன் நாட்டையும் வீரவளத்தை யும் பலர் பலவாறு புகழ அதனைக் கேட்டுப் பொருத அவர்கள், ''பாண்டியனைப் புகழ்ந்தார் அனைவரும் நகத்தக்கார்'' என்று இகழ்ந்துரைத்துத் தமக்குத் துணையாகத் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மாள், பொருநன் என்ற வேளிர் ஐவரோடு சேர்ந்து பாண்டியனின் அரசு பறிக்க வந்த னர். இதனைக் கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் அப்பகைப் புலத்தார் தம்மை வியந்து தன்னை இகழ்ந்து வந்தது கேட்டுத் தன் அவையினைக்கூட்டி ஆண்டு ஒரு வஞ்சினம் மொழிகின்றான். அவ் வஞ்சினத்தின்படி வஞ்சி சூடிச் சென்று அவர்களைப் பொருது அலைத்து அவரவர்க்குரிய தலைநகரங்களாய வஞ்சி உறையூர் காறும் துரத்திச் சென்று அவர்களை ஈன்றோரும் அவர் தம் உரிமைச் சுற்றமும் நாண வென்றி காண்கின்றான்.

இந் நெடுஞ்செழியன் தனி ஒருவனாய் நின்று இரு பெரு வேந்தரை வென்ற செய்தி மூன்றாம் இராசசிங்க பாண்டியன் தந்த சின்னமனூர் செப்பேட்டில் கண்ட உண்மை.

"தலையாலங்கானத்தில் தன்னொக்கும் இருவேந்தரைக்
கொலைவாளில் தலைதுமித்துக் குறைத்தலையின்
கூத்தொழித்தும்"

என்று இச் செய்தியைச் செப்பேடு பேசுகின்றது. இவன் செய்த இத் தலையாலங்கானத்துப் போர்ச் செய்தி புற நானூற்றிலன்றியும், பத்துப் பாட்டிலும் அக நானூற்றிலும் பரக்கப் பேசப்படுகின்றது.

இப் பாண்டியன் மிக இளையனாயிருந்தும் பெரு வேந்தர்களையும், வேளிர்களையும் ஒரு களத்து எதிர்த்து வென்றி கண்ட நிகழ்ச்சியைப் பேராசிரியர்

"கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டு"

என்ற பாட்டு 'சிறியோர் பெருந்தொழில் புரிந்தது' என்று எழுதியுள்ளார். (மெய்ப்பாடு சூத். 7. பேரா.) இவர்காட்டிய மேற்கோளுக்கேற்ப இப் பாண்டியன் இளைஞன் என்ற கருத்தால் அரசப் பெருமக்களும் வேளிரும் இவனை வென்று இவன் நாட்டினைக் கொள்ளையிட வந்த செய்தியை இடைக்குன்றூர் கிழார்

"விழுமியம் பெரியம்யாமே நம்மிற்
பொருநனும் இளையன் கொண்டியும் பெரிதென
எள்ளிவந்த வம்ப மள்ளர்' (புறம். 78)

என்று குறிப்பிடுவதால் அறியலாம்.

அன்றியும் இந்நெடுஞ்செழியனே பகையரசர்கள் தன்னைக் குறித்து இளைஞன் என்று இகழ்ந்துரைத்ததாக

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்..."

என்று தொடங்கும் பாட்டாலும் வலியுறும்.

மேற்குறித்த இடங்களில் இந்நெடுஞ்செழியன் இளைஞன் என்று பேசப்பெற்றதற்கேற்ப இடைக்குன்றூர் கிழார்,

"கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்க அவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்டு
அயினியும் இன்று அயின்றனனே வயின்வயின்

உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே''

என்று பாடி அக்கூற்றினை உறுதிப்படுத்துகின்றார்

இப்பாட்டில் பாண்டியன் பச்சிளங் குழவியாயிருந்து பேராற்றல் படைத்த அரசர்களையும் மள்ளர்களையும் கண்டோர் மருளும் வண்ணம் வென்ற செய்தி கூறப்படுகின்றது.

கிண்கிணி என்பது பச்சிளங் குழவிக்கு அணிவிக்கும் அணிகலம். இப் பாண்டியன் போர்க்கோலம் பூண்பதற்காகத் தன் தாளிலிருந்த கிண்கிணியை நீக்கிக் கழலைப் பூண்டிருக்கின்றான்.

குறுந்தொடி என்பது மகவிற்கு அணிவிக்கும் வளையல். அவ்வணி துறந்த கையில் பாண்டியன் வில்லேந்தியுள்ளான்.

குழந்தைகட்குப் பிறந்த ஐந்தாம் நாளில் அணிவிக்கும் ஐம்படைத் தாலியாகிய அணியினை இன்னும் நீங்கிறுனில்லை.

பால் குடிக்கும் பருவம் நீங்கி, சோறுண்ணும் பருவம் அடைந்துள்ளான். இச் சிறுவன் போர்க்களம் புகுந்தபோது இவனை எதிர்த்து வேந்தர் வரிசையில் இருவரும், குறுநில மன்னர் வரிசையில் ஐவரும் வந்திருக்கின்றனர்.

இவ்வளவோடன்றி அவர்தம் படையும் மள்ளர்களும், ஞாலம் நெளிய ஈண்டியுள்ளனர். இக் குழவிப் பாண்டியன் தன்னைக் கொல்ல அடுத்தடுத்து வந்த மள்ளர்கள் ஒவ்வொருவரையும் அழுந்தப்பற்றி அவர்களைத் தலைக்குமேல் தூக்கி அவர்கள் அலற அலற நிலத்திடை எறிந்து அட்டிருக்கின்றான்.

இந்நிகழ்ச்சிகளை வைத்துப் பார்க்கும்போது அனைவர்க்கும் மருட்கை பிறக்கின்றது. ஒரு குழவியை எதிர்க்க இத்தனை வேந்தர்களா, இவ்வளவு அரசர்களா, இவ்வளவு படைகளா வேண்டும்? அப்படி வந்த அனைவரும் தோற்றிருக்கின்றனர் என்றால் இப்பாண்டியக் குழவி மூன்று அகவையில் அம்மை யமுதுண்டு பாடிய ஞானசம்பந்தர்போல ஏதாவது கடவுளிடமிருந்து ஆற்றல் பெற்றிருந்ததா? அல்லது இப்பாட்டினை உயர்வு நவிற்சியாகப் பாடினார் புலவர் என்று கூறி ஒழிவதா? அன்றி இப்பாட்டிற்கு ஏற்ப உரை கூறி விளங்கிக் கொள்வதா?

இதுகாறும் இப்பாண்டிக் குழவியின் இளமையையும், அது செய்த போரின் பேராற்றலையும் கண்டோம். இனி அக்குழவி

யின் அறிவாற்றலைக் காண்போம். கிண்கிணி களைந்த பருவத்துக் குழந்தையும், குறுந்தொடி கழித்த கையையுடைய குழந்தையும், பால்விட்டு அயினி அன்றயின்ற சிறுவனும் பேசஒண்ணாத அறிவுத் திறப் பேச்சுகளை இக்குழவி பேசியுள்ளது.

இப்பாண்டியனைப்பற்றிச் சோழனும் சேரனும் குறுநிலமன்னர் ஐவரும் இளையன் இவன் என்று கூறியுள்ளனர். இளையன் இவன் என்று அண்மைச் சுட்டாகக் கூறியதை நோக்கும்போது இப்பாண்டியனும் சேர சோழரும் ஒருங்கு சேர்ந்த ஒரு ஞான்று இவனைப்பற்றி அவர்கள் அங்ஙனம் சுட்டிக் கூறியுள்ளனர் போலும்! அச்சொல்லைப் பொறுக்கமாட்டாத அக்குழவி தன் அரசவையில் அவ்வேந்தர் மொழிந்தது கூறிச் சினந்து தானும் ஒரு வஞ்சின முரைக்கின்றது போலும்!

'நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக்கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படே னாயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பில்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே' (புறம் 72)

இப் பாட்டில் இப் பாண்டியச் சிறுவன் பேசிய பேச்சு ஆண்டு முதிர்ந்து துய்த்து அடிபட்ட ஒருவன் பேச்சுப் போலிருக்கின்றது. இப்பாட்டு 'கிண் கிணி களைந்த கால் ஒண்கழல் தொட்டு' என்ற பாட்டோடு பொருள் இயல்பில் பொருந்தக் காணோம். இக் குழவியோ சிறு சொல் சொல்லிய சினங்கெழு வேந்தரைக் கொல்லாதாம். அவர்களைப் போர்க்களத்தில் புறங் கொடுக்கச் செய்து அவர்களையும் அவர்கள் முரசத்தோடு அகப் படுத்துமாம்.

இவ்வாறு வஞ்சினம் மொழிந்த அவன் போர்க்களம் புகுந்ததைக் கண்ட இடைக்குன்றூர் கிழார்

''மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி
மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து
தெண்கிணை முன்னர்க் களிற்றின் இயலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன் எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே
எஞ்சுவர் கொல்லோ பகல்தவச் சிறிதே''

என்கின்றார். 'கிண்கிணி களைந்த கால்'' என்ற பாட்டில் வயின் வயின் வந்த வம்ப மள்ளரைக் கவிழ்ந்து நிலம் சேர அட்டான் என்று கூறியது மெய்யாகும் வண்ணம் பல மன்னர் வந்த செய்தியைக் கூறுகின்றார். இங்ஙனமே இப் பாண்டியன்,

'குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து'

என்றாங்கு இப் பாண்டியன் வந்து பொருத நிகழ்ச்சியை அப் புலவர்

''மன்ற வேம்பின் மாச்சினை ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து''
என்கின்றார்.

இப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செய்த போரையும் அவன் வென்றியையும் இடைக்குன்றூர் கிழாரையன்றி, குடபுலவியனார் என்ற புலவரும்

''இமிழ்கடல் வளைஇய ஈண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத் தொருமையும்
....
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை
எழுவர் நல்வலங் கடந்தோய்'' (புறம் 19)

என்று கூறுகின்றார்.

இவனோடு போரிட்டோர் எழுவர் இன்னார் என்பதை,

''கொய்சுவற் புரவிக் கொடிதேர்ச் செழியன்
ஆலங்கானத்து அகன்தலை சிவப்ப

சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் மகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வல மடங்க வொருபகல்
முரைசொடு வெண்குடை அகப்படுத்துரை
செலக்கொன்று''

என்று அவன் கூறிய வஞ்சினத்தை நிறைவேற்றிப் பின்னர் பகையரசர்களைக் கொன்ற செய்தி குறிக்கப் பெறுகின்றது.

இதுகாறும் கூறிய செய்திகளைத் தொகுத்துப் பார்த்தால் பாண்டியன் இளையன் என்பது ஒருதலை. அவன் தன்னை எதிர்த்தோர் எழுவரையும் வென்றதும் உண்மை. இவை உண்மையேல் பால்விட்டு அயினி அயின்றது, கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டது, குறுந்தொடி கழித்த கையில் வில் பற்றியது, வயின்வயின் வந்த வம்ப மள்ளரை அழுந்தப்பற்றியது, அவரை அகல்விசும்பு ஆர்ப்பெழ அட்டது போன்ற செய்திகளும் வெவ்வேறு இடங்களில் குறிக்கப்பெற்றனவேனும் நம்புதற்குக்கூடவில்லை. அங்ஙனமாயின் அச் செயல் உயர்வு நவிற்சியா என்றால் வரலாற்று உண்மை நிகழ்ச்சியில் உயர்வு நவிற்சி கலந்தால் கசடற வல்லதும் ஐயந்தரும், கழகப் பாட்டை அங்ஙனம் வழுப்படுத்தி அமைதி கூறுவதைவிட்டு இலக்கணத்தின் அடிப்படையில் உண்மை உரை காண்போம்.

மேலே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் குறித்துப் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற பாக்களிலிருந்து கிடைக்கும் வரலாறுகளைக் கொண்டு பார்த்தால் அவன் இளையன் என்ற செய்தியைப் பகையரசர்கள் தெரிந்து வைத்திருந்தமை தெரிகின்றது. அது

நம்மிற், பொருநனும் இளையன் கொண்டியும் பெரிதென
எள்ளிவந்த வம்ப மள்ளரை'' (புறம் 78)

என்பதால் அறியலாம்

அன்றியும் இச் செழியன் இதுகாறும் யாண்டும் பொருது தன் ஆற்றல் காட்டினனில்லை. இவன் ஆற்றல் உடையவன் என்பதைச் சேரனோ, சோழனோ, மற்றையோரோ நேரில் அறியாது போயினும் இப் பாண்டியனையும், இவன் நாட்டையும் பலர் மேம்பட மொழிந்துள்ளனர். இப் புகழுரைகளைக் கேட்டுப் பொறுமைகொண்ட சோழன் சேரன் முதலியோர் பாண்டியனின்

இளமை நோக்கி எள்ளி நகையாடி இழித்துரைத்திருக்கின்றனர். இங்ஙனம் அவர்கள் தன்னை இழித்துரைத்தற்குக் காரணம் அவர்களிடம்

'படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம்என்று'

கொண்ட செருக்காலே யாம் என்பதைத் தெளிகின்றான். தம் வலி ஒன்றே தெளிந்த அம் மாற்றார்கள் தம்மொடு பொருவோன் வலி நோக்கினாரில்லை. அவர்கள் உறுதுப் பஞ்சாது உடல் சினம் செருக்கிச் சிறு சொல் சொல்லியுள்ளாரே என்பதைக் கண்ட செழியனுக்கு மானங் காரணமாகச் சினம் பிறந்து வஞ்சினம் உரைக்கின்றான். இவ் வஞ்சினத்தில் அவனுக்குப் பகைவரைக் கொன்று அவர் நாட்டைப்பற்ற வேண்டுமென்ற வேட்கையினும், அன்னார்க்குத் தன் வலிகாட்டிச் செருக்கழிக்க வேண்டும் என்பதே மேம்பட்டதெனத் தெரிகின்றது. அதனால்தான் 'யான் நூழிலாட்டு மேற்கொள்வேன்' என்றது

''சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேனாயின்''

என்று வஞ்சினம் கூறுகின்றான். இது அவனுடைய கன்னிப் போர். இது முதற் போர் என்றாலும் இவன்பால் பொதிந்து கிடந்த ஆற்றலையும் வலிமையையும் உணர்ந்தோர் இவனைப் பாராட்டிப் பேசியுள்ளனர்.

முதற் போருக்குப் போகும்முன் அவன் அக்கால வழக்கப் படி நீராடி, வேம்பு சூடி, கிணை முழங்கக் களிறுபோலப் பெரு மிதத்தோடு நடந்து போரை மேற்கொள்ளுகின்றான் செழியன் பால் செருவேட்டு வந்த வம்ப மள்ளர்களோ மிகப் பலராக இருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் கொல்ல வேண்டின் சற்றுப் பொழுது நீட்சி வேண்டும். கதிர்மாய் பொழுதில் கள நிகழ்ச்சி இராது. அதனால் செழியன் சில மள்ளர்களைக்கொல்லக் காலமின்மையால் விடுத்தலும் கூடும் என்று அவன் மறம் பேசப் படுகின்றது.

இப் பேச்சிற்கும், இவன் மொழிந்த வஞ்சினத்திற்கும் ஏற்ப இருபெரு வேந்தரும்,ஐந்துவேளிரும் படையோடு ஆலங்கானம் என்ற விடத்தில் நிலமகள் பொறையாற்றாது நெளியுமாறு ஈண்டிக் கிடக்கின்றனர்.

இருபுறப் படைகளும் பொருகின்றன. யானைகளும் மறவர் களும் சிதையுண்டு போக, ஊதின் மகளிர் கசிந்து அழக் கண்ட

கூற்றமும் கண்ணோட்டம் கொள்கின்றது. செழியன், பகைவர் தம் உரிமை மகளிரும் பெற்றோரும் நாணும் வண்ணம் வென்றி கொள்கின்றான்.

அப்பொழுது நெடுஞ்செழியன் தேரில் கொடுஞ்சி பற்றி உழிஞை சூடி நிற்கின்றான். செழியனால் பற்றப் பெற்ற பகைவரும் நிற்கின்றனர். புலவர், செழியனை எள்ளி வந்து எதிர்த்த வேந்தர்கள் கூறிய சிறு சொல்லையும், அச் சொல் கேட்கப் பொருது அவன் உரைத்த வஞ்சினத்தையும் தெரிந்தவராதலின் வஞ்சினம் நிறைவேற்றிய வேந்தன், அகப்பட்ட பகைப்புலத்தார் அறிய அவர்கள் கூறியாங்கு இளையனோ இவன் என்று பகை நாணக் கேட்கும் பாட்டே இது.

பாண்டியன், சோழனுக்கும் சேரனுக்கும் இளைஞனாக இருக்கலாம். அதனால் அவன் ஆற்றலற்றிருக்க வேண்டும் என்பதில்லை. பலர் இப்பாண்டியன் உறுதுப்பினைக் கூறியும் அதனைப் பொருட்படுத்தாது "நகுதக்கனரே நாடுமீக்கூறுநர்" என்று இகழ்ந்து பேசியுள்ளனர். உருவுகண்டு எள்ளித் தம்மையே பெரிதும் வியந்து அவன்

"பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்றுதன் தலைவந்த
புனைகழல் எழுவர் நல்வய மடங்க
ஒருதானாகிப் பொருது களத்து அட்ட"

பின்றை இடைநின்ற புலவர் பகைவரை நோக்கி அவர் கூறி எள்ளியாங்கு இன்னின்னவாறு செழியன் இளையனோ, இன்னின்ன செயல் புரிந்த இவன் எத்தகைய இளையன் என்று கேட்கின்றார்.

"*கிண்கிணி களைந்தகால் .... யார் கொல்*"

ஒண்கழல் தொட்டகால் ஒருகாலத்து, கிண்கிணி அணிந்திருந்து களையப் பெற்றதே. வேம்பின் ஒண்தளிர் நெடுங்கொடி உழிஞை பவரொடு மிடைந்த நுதல் ஒரு காலத்துக் குடுமி இருந்து களையப்பெற்றதே. வில் பற்றிய கை ஒரு காலத்துக் குறுந்தொடி பூண்டு கழிக்கப் பெற்றதே. வெற்றித் தார்பூண்ட அவன் மார்பிடை இப்பொழுதும் ஐம்படைத்தாலியைக் களைந்திலனே! அத்தகைய இளையோனாய் இருக்கின்றானே நீவிர் இகழ்ந்த *பாண்டியன்!*

இளைஞன் என்றால் தாய்ப்பால் உண்ணல் ஒய்ந்து இன்று தான் உணவுண்டானோ? அத்தகைய இளையனோ இவன்! அடுத்து அடுத்துத் தன்மேல் பகைத்து வந்த புதிய புதிய மள்ளர்களை அவர் தம் தோற்றங் கண்டோ மிகுதி கண்டோ வியவாது

ஏறென நீ எழுவாய்!

- தமிழ் மறவன் -

எந்தத் திசையில் இருந்து பகைவர்
  எதிர்த்திட வந்தாலும்
அந்தத் திசையை அடித்து நொறுக்கிடும்
  அடல்புலிக் கூட்டமடா!
இந்தப் பொழுதில் உறங்கிவிட் டோமெனில்
  என்றும் உறங்குவமோ?
மந்திச் சிறுமொழி இந்திக் குறுநரி
  வந்து புகுந்திடுமோ?

என்ன வளங்கள் என்ன பெருமைகள்
  இந்தியிற் கண்டிருப்பாய்?
என்ன கருத்தில் அதனை நுழைத்தனர்
  எந்தமிழ் நாட்டினிலே!
அன்புத் தமிழினை அழித்திட வோ? அவர்
  ஆட்சியை நாட்டிடவோ?
இன்னும் உறக்கமேன்? ஈடில் மறவனே!
  ஏறென நீ எழுவாய்!

கேளென வந்தவர், வாளினை நீட்டினர்;
  கேண்மை இனியெதற்கோ?
நீளுறு வாளினை நீயும் எடுத்திடு
  நீறுபடப் புரிபோர்!
மூளும் பகையுயிர் குடித்திடு இல்லெனின்
  முடித்திடு நின்னுயிரை!
தோளைக் குலுக்கிடு; தூய்தமிழ் காத்திடு!
  துள்ளி நடையிடடா!

(முன்பக்கத் தொடர்ச்சி)

இகழாது அவரை இறுகப்பற்றி வானிடை உயர்த்தி அலற எறிந்தது குறித்து மகிழ்ச்சியோ தன்னை வியப்பதால் வரும் செருக்கோ கொள்ளாதிருந்தானே அவன் யாவன்? இதோ கொடுஞ்சி பற்றி நிற்போன் நீவிர் உளையக் கூறிய இளையவன் தானே என்று நகையாடுகின்றார் புலவர்.

இதுபோன்று ஏகாரத்தை வினாவாக்கித் தோற்ற பகைவரை முன்னிலைப் படுத்திப் பாண்டியன் அருகிருப்ப அவன் தோற்றத்தைக் காட்டி அவரால் இகழப்பெற்றுங்குச் செழியன் இளைஞனல்லன் என்பதைச் சுட்டிக் காட்டிப் பகைவர்கட்கு அறிவு கொளுத்தப் பாடியது இப்பாட்டு என்று கொண்டால் உயர்வு நவிற்சியாகாது இயற்கைப் பொருளே கிடைக்கும். *

மக்கள்

சப்பானியரின் வியத்தகு பழக்கங்கள்.

ஒவ்வொரு நாட்டினரிடத்தும் சிறப்பான பழக்கவழக்கங்கள் சில உண்டு. ஆனால் உலகின் பெரும்பாலான நாடுகளில் உள்ள மக்களின் பெரும்பாலான பழக்கங்கள் ஒன்றாகவே இருப்பதைப் பார்க்கின்றோம். அவர் தமக்குள் சிறப்பான சில நடைமுறைகளே வேறுபாடாக விருக்கும். சீனா, சப்பான் போன்ற ஒரு சில நாடுகளின் பழக்க வழக்கங்கள் உலகின் பெரும்பாலான நாடுகளைப் போன்று இரா. அவர்தம் ஒழுகலாறு நமக்கு வியப்பை ஊட்ட வல்லது. கீழே சப்பான் நாட்டு மக்களின் வியத்தகு பழக்கங்கள் சில தரப்பட்டுள்ளன. படிப்பதற்கும் நினைப்பதற்கும் சுவை தருவன இவை. கடைப்பிடிக்க வேண்டுவனவும் உண்டு.

○ சப்பானிலுள்ள சிறிய கடைக்காரர் முதல் பெரிய வங்கிக் கணக்கர் வரை, கணக்குகளை வாயால் போடுவதோ, தாள்களில் போட்டுப் பார்ப்பதோ இல்லை. சர்பான் என்ற கணக்குப் பொறியையே எல்லாரும் பயன்படுத்துகின்றனர். சிறியதொரு கணக்கைக்கூட அப் பொறியின் உதவி கொண்டே அவர்கள் போடுகின்றனர்.

○ நாம் கைவிரல்களைக் கொண்டு எண்களை ஒவ்வொன்றாக எண்ணுகையில் சுண்டு விரலிலிருந்து தொடங்கிப் பெரு விரல் வரை எண்ணுகின்றோம். அவர்கள் பெருவிரலிலிருந்தே எண்ணத் தொடங்குகின்றனர்.

○ அவர்கள் வலது பக்கம் இருந்து இடது பக்கமாகவே எழுதுகின்றனர். நம் புத்தகத்தின் கடைசிப் பக்கம் அவர்கட்கு முதல் பக்கமாகிறது. புத்தகத்தின் வரிகள் மேலிருந்து கீழாக எழுதப்படும். அடிக்குறிப்புகள் புத்தகத்தின் தலைப் பகுதியில் எழுதப்படுகின்றன. எழுதுகின்ற முறையையும் மேல் கீழாகவே எழுதுகின்றனர்.

திரு. தேவநேயப் பாவாணர்,
  ட. 79, ஆக்சிலியம் கல்லூரிச்சாலை,
    காட்டுப்பாடி நகர் விரிவு,
      வேலூர்,
        வட ஆர்க்காடு,
          தமிழகம்.

என்று நாம் எழுதுவதை அவர்கள்,

தமிழகம்.
வட ஆர்க்காடு.
வேலூர்.
காட்டுப்பாடி நகர் விரிவு.
C 79, ஆக்சிலியம் கல்லூரிச்சாலை.
தேவநேயப் பாவாணர். திரு.

என்று எழுதுவர். நல்ல வேளை அவர்கள் எழுத்துகளையும் முன் பின் மாற்றாமல் எழுதுகின்றனரே!

○ சப்பானியர்கள் தங்கள் வீட்டின் கதவுகளுக்குப் பூட்டுப் போடுவதில்லை. சில நேரங்களில் போடவேண்டியிருந்தாலும் பூட்டின் திறவுகோலை வலமிருந்து இடமாகச்சுழலுமாறே அமைத்திருப்பர்.

○ திருமணக் காலங்களில் நாம் கருப்புடையை அணிவதே இல்லை. கருப்புடையை இறப்பின் அறிகுறியாக நினைக்கின்றோம். சப்பானியர்கள் திருமணத்தில் கருப்பு உடையையே அணிகின்றனர். துன்பத்திற்கு அறிகுறியாக அவர்கள் வெள்ளை உடைகளையே அணிகின்றனர்.

○ எல்லா நாடுகளிலும் உள்ள போர் மறவர்கள் வாள்களை ஒரு கையிலேயே பிடித்துக் கத்திச் சண்டையிடுகின்றனர். சப்பானியர் இரண்டு கைகளாலுமே கத்தியைப் பிடித்துச் சண்டை யிடுகின்றனர்.

○ இரவு நேரங்களில் வீடுகளில் உள்ள பலகணிகள், கதவுகள் முதலியவற்றை நன்றாக அடைத்துக் கொண்டே அவர்கள் உறங்குகின்றனர்.

○ பையனைக் குறிக்கும் Boy என்ற ஆங்கிலச் சொல் சப்பானிய மொழியில் சிறுவனையும் குறிக்கும்; சிறுமியையும் குறிக்கும்.

○ திரு, திருவாட்டி என்பது போன்ற உயர்வுச் சொற்களாக, சப்பானியர்கள் San என்ற பொதுச் சொல்லையே பயன்படுத்துகின்றனர்.

○ அவர்கள் குடைகளை மடக்கிக் கொண்டு போகும் பொழுது தலைகீழாகவே பிடித்துச் செல்கின்றனர். கைப்பிடியைப் பிடித்துச் செல்வதில்லை. அவர்களுடைய குடை மிகவும் கனமாக இருக்கும். நாம் ''கல் போல் கனக்கின்றது'' என்று கூறுவதுபோல், அவர்கள் ''குடைபோல் கனக்கின்றது'' என்கின்றனர்.

○ விருந்தாளிகள் வீட்டிற்கு வந்தவுடன் வீட்டில் உள்ளவர்கள் அவர்கள் முன் போய் மண்டியிட்டு வரவேற்கின்றனர்.

○ மென்மையான மெத்தை தலையணைகளில் சப்பானியர் படுப்பதில்லை. முரட்டுத்தனமான படுக்கையையும், வட்டமானதும் கல் போன்று அழுத்தமானதுமான தலையணைகளையுமே அவர்கள் பயன்படுத்துகின்றனர். படுக்கையைவிட்டு எழுகையில் அவர்கள் கவிழ்ந்து படுத்தவாறே எழுகின்றனர்.

○ படுக்கையிலிருந்தவாறே உண்ண நேரிட்டால் அவர்கள் தலையணைப் பக்கமாகத் திரும்பியே உண்ணுகின்றனர்.

○ வீடுகளைக் கட்டுகையில் முதலில் கூரையில் தொடங்கிக் கீழாகக் கட்டிக்கொண்டே வருகின்றனர். அங்குத் தோட்டங்கள் வீட்டின் பின்புறமாகவே வைக்கப் பெறுகின்றன.

○ எல்லா நாடுகளிலும் பொதுவாகக் காலையிலேயே குளிக்கின்றனர். சப்பானியர்கள் இரவிலேயே படுக்கைக்குப் போகுமுன் குளிக்கின்றனர். கடுங் கோடைக் காலத்தில் 'தவிர தண்ணீரில் அவர்கள் குளிப்பதே இல்லை கொதிக்கின்ற அளவுள்ள வெந்நீரிலேயே குளிக்கின்றனர்.

○ குளிப்பதில் ஒரு வியப்பான பழக்கம் அவர்களிடையே உள்ளது. பெரிய தொட்டியில் வந்து விழும் கொதிக்கும் நீரில் குடும்பத்தில் உள்ள ஆண் பெண் குழந்தைகள் அனைவரும் ஒன்றுகவே எவ்வகையான கூச்சமுமின்றிக் குளிக்கின்றனர். குளிக்கையில் பெரும்பாலும் எவரும் உடையணிவதில்லை. பொதுவிடங்களில் அமைந்த குளிப்பறைகளிலும் இவ்வகைப் பழக்கமே காணப்படுகின்றது எதிலும் திறந்த வாழ்க்கை வாழ்வதே சிறந்தது என்று கூறி இதைப்பற்றி அவர்கள் பெருமையும் படுகின்றனர். "திறப்பான உடல் இறைவனுல் படைக்கப்பட்டது. அதற்கு ஒளிவு மறைவு தேவையில்லை" என்பது அவர்கள் கொள்கை. தனிப்பட்ட கமுக்கம் (இரகசியம்) என்பதே அவர்களிடம் இல்லை என்று கூறிக் கொள்கின்றனர். மறைவு, கமுக்கம் என்ற சொற்களுக்கு நேரான சொல் அவர்களின் மொழியிலேயே இல்லாதது பெருத்த வியப்பு!

○ தனியிடங்களிலாகட்டும் பொது இடங்களிலாகட்டும், குளிக்கும் முன் ஆணும் பெண்ணும் தங்கள் குளி சீலைகளை—அவிழ்த்துக் கசக்கிப் பிழிந்த பின்பே நீரில் இறங்கிக் குளிக்கின்றனர்.

○ இடுப்புக் கச்சைகளுக்கு இணக்கியும் (Buckles) காலணிகளுக்கு முடிச்சும் பின்புறமாகவே அமைக்கப்படுகின்றன.

○ அவர்கள் தண்ணீரே குடிப்பதில்லை. பிரான்சில் உள்ளவர்கள் எப்பொழுதும் கனிச்சாறு(Wine) அருந்துவது போலவே சப்பானியர்கள் 'தேநீரையே எப்பொழுதும் குடிக்கின்றனர்.

பால் கலவாத சூடான தேநீரே அவர்களுக்குக் குடிக்கும் தண் ணீர்போல் பயன்படுகின்றது.

○ தைக்கும் முன் ஊசியில் நூலைக் கோப்பதில்லை. நூலை நிலையாகப் பிடித்துக் கொண்டு ஊசியையே கோக்கின்றனர். தைக்கும் பொழுது ஊசியை நேராகப் பிடித்துக்கொண்டு துணி களையே முன்னும் பின்னும் இழுத்தும் வாங்கியும் தைக்கின்றனர்.

○ சப்பானியக் குழந்தை பிறந்தவுடனேயே அதன் அகவை (வயது) ஓராண்டாகி விடுகின்றது. கரு தொடங்கிய நாளிலிருந்தே குழந்தைக்கு அகவை தொடங்குகின்றது.

○ சப்பானியக் கணவர்கள் தங்கள் மனைவிகளை 'ஓய்' (Oiee) என்றும், மனைவிகள் தங்கள் கணவர்களை 'நே அனாத்தா' (Ne Anaata) என்றும் கூப்பிடுகின்றனர். ஓய் என்று கூப்பிட்ட கணவனுக்கு மனைவி 'ஃஆய்' (Hai) என்று விடையளிக்கின்றாள். Hai என்றால் ஆமாம் என்று பொருள்.

○ கனிச்சாற்றினைக் (Wine) குளிரவைத்துக் குடிப்பதே எல்லா நாட்டிலும் உள்ள பழக்கம். சப்பானியர்கள் அதைச் சுட வைத்தே குடிக்கின்றனர்.

○ மேற்கு நாடுகளில் கணவனும் மனைவியும் தனித்து வாழவே விடப்படுகின்றனர். சப்பானில் கணவன், மனைவி, பாட்டன் பாட்டி, பிள்ளைகள், மருமக்கள், பெயரப் பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்து ஒன்றாகவே வாழ்கின்றனர். இன்ப துன்பங் கள் எல்லாராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. தன்னலத் திற்கு அவர்கள் சிறிதும் இடங் கொடுப்பதில்லை. இந்தப் பழக்கம் நம் தமிழகத்தைப் பொறுத்த அளவில் மிகவும் பொருந் துவதாகும்.

○ சப்பான் ஓவியர்கள் படங்களைப் படுக்கவைத்தே வரைகின்றனர். பிற நாடுகளில் அவற்றைச் சாய்த்து வைத்தே வரைகின்றனர்.

○ அவர்கள் எப்பொழுதும் எதிர் மறையாகவே வினாக் களை எழுப்புகின்றனர். எடுத்துக்காட்டாக "நீ எடுத்தாயா?" என்பதை "நீ எடுக்காமல் இருந்தாயா?" என்றேகேட்கின்றனர். விடைசொல்பவர் 'இல்லை' என்றால் "ஆம், எடுத்தேன்" என் றும், 'ஆம்' என்றால் 'எடுக்கவில்லை' என்றும் பொருள்படச் சொல்லுவர். பேசுவதில் சப்பானியர்கள் மிகவும் முன்னெச்ச ரிக்கை யானவர்கள்.

○ 'செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்ற குறள் வேறெங்கும் பயன்படுவதைவிடச் சப்

பானில் மிகப் பயன்படக் கூடியது. இங்கெல்லாம் சொற்பொழிவு களுக்கு முன்பே விருந்து நடைபெறும். சப்பானில் முதலில் சொற்பொழிவு; பின்பே விருந்து.

○ இங்கெல்லாம் விருந்தினர்கள் வீட்டிற்கு வரும்போதே குழந்தைகளுக்கான தின்பண்டங்களை வாங்கி வருவது வழக்கம் அங்கெல்லாம் விருந்தினர்கள் வீட்டைவிட்டுப் போகும்பொழுது தான் ஏதாவது பண்டங்கள் வாங்கித் தருவது வழக்கம்.

○ இளமையிலிருந்தே சப்பானியக் குழந்தைகள் துன்பத் தைப் பொறுத்துக் கொள்ளப் பயிற்றுவிக்கப் பெறுகின்றனர். எந்தத் துன்பத்திலும் அவர்கள் முகத்தைக்கூடத் துயரமாக வைத்திருப்பதில்லை. ‘இடுக்கண் வருங்கால் நகுக’ என்று நாம் கூறுவது அவர்களுக்கே பொருந்தும். நோயாளி முன்போ துன்புற்றவன் முன்போ எந்தவொரு சப்பானியரும் வருத்தம் காட்டுவதோ, துயரம் உசாவுவதோ இல்லை. அதற்கு மாறுக அவர்கள் முன்பு நன்றுகச் சிரித்து நகையாடிப் பேசுகின்றனர். துன்புற்றவர்க்கும் இது நல்ல மருந்தாக இருக்கின்றது. நம் துன் பத்தால் பிறரும் துன்பமடையக் கூடாது என்பதே அவர் கொள்கை.

○ ‘சப்பான் குழந்தை அழுவதில்லை’ என்று கூறப்படு கின்றது. இது மிகவும் உண்மை தன் குழந்தைக்கு எவ்வெவ் வகையில் மகிழ்ச்சி உண்டாக்க முடியுமோ, அவ்வவ் வகையில் எல்லாம் அதன் தாய் முயன்று நிறைவளிக்கின்றுள். சின்னக் குழந்தைகட்குக்கூடப் பெரிய சட்டைகளையே அணிவிக்கின்ற னர். சட்டைகள் வண்ண வண்ணமாகவும், பூக்களும் படங் களும் நிரம்பியதாகவுமே இருக்கும். இவற்றை அணிந்து கொள் வதால் குழந்தைகள் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருக் கின்றன.

○ சப்பானில், சரியாகச் சிப்பம் செய்யப்படாத மிகச் சிறியபொருள்கூடத் திருட்டுப்போகாமலும் சேதமுருமலும் புகை வண்டி வழியே ஒழுங்காக எடுத்துச் செல்லப்பட்டு, உரியவர்க் குக் குறித்த காலத்தில் கொடுக்கப் படுகின்றது. உலகில் வேறு எந்த நாட்டிலும் இத்தகைய பொது ஒழுங்கு கையாளப் பெறுவ தில்லை.

○ அவர்கள் உணவைக் கரண்டியால் எடுத்து உண்ப தில்லை. மூங்கிலால் ஆன ஒருவகைக் குச்சியையே கரண்டிக்கு மாறுகப் பயன்படுத்துகின்றனர். பாம்புக் கறியும் அதனின்று வடித்த சாறும் அவர்களுக்கு மிகவும் விருப்பமான பொருள்கள்.

○ எந்த ஒரு சிறு செயலுக்கும் ‘நன்றி’ சொல்லும் அவர் களின் நன்றிமறவாத் தன்மை வியந்து பாராட்டற்குரியது.

(அடுத்த இதழில் முடியும்)

துரை - கலியபெரத்தினம்
(அரசினர் கலைக் கல்லூரி, குடந்தை.)

கல்லூரிப் பயிற்றுமொழி

மொழி மக்களின் விழி. மாந்த உணர்ச்சிகளுக்கு உண்மை யான உருவம் கொடுக்கும் கருவி – ஒரு குறிப்பிட்ட குமுகாயத் தின் வாழ்வை, வளத்தை, பண்பாட்டை, கலையை இலக்கியப் படைப்புகளால் வெளிக்காட்டும் ஆடி! இறந்தகாலச் சிறப்பினை எண்ணி, நிகழ்காலத்தை மேலும் சிறப்பாக நடத்தவும், எதிர் காலத்தை ஏற்றமிக்கதாக்கவும் பயன்படும் வழிகாட்டி – துணை வன் மொழி!

இப்படி உலகத்தில் தோன்றிய மொழிகள் பலவற்றுள்ளும் காலத்தாலும் கடற்கோளாலும் கரைக்க முடியாத ஆற்ற லாய் – அறிவாய், திருவாய் விளங்கும் இன்மொழியாம் – தொன் மொழியாம் "தென்மொழி" யென்னும் தீந்தமிழ் – பாண்டியன் பெற்றெடுத்த பைந்தமிழ், ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்து அரசோச்சிய காலம் ஒன்று இருந்தது.

ஆனால் இன்று "கூலிக்கு மாரடிக்கும்" நிலையில் நாம் இருக்கிறோம் மொழியோ வேலியின்றி வளரும்பயிராக, உரிமை யின்றி உயிரோடு மட்டும் உலவுகிறது ஆலையில் இட்ட கரும் பாய்–வேலையுள் சிக்கிய துரும்பாய்க் கருத்துக் குருடர்களாலும் கவலையின்றியிருப்பாராலும் அலைக்கழிக்கப்படுகிறது. இந்நிலை யில்தான் மொழிகாக்கப் புத்துணர்வும் புதுத்தென்பும் பிறக்கின்ற நன் நெஞ்சங்களையும் "தென்மொழி" நமக்குத் தருகின்றது.

ஆட்சியிலிருப்போர் கல்லூரியில் பயிற்று மொழியாகத் தமி ழைக் கொண்டுவர முனைந்திருப்பது வரவேற்கத் தக்கது என்று லும், முனைதலோடு நிறுத்தாது முயன்று அதன் வெற்றிக்கான ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டும். பயிற்று மொழிப் பாட நூற்கள் மிகுதியும் கிடைக்கப்பெற வழி செய்ய வேண்டும். இப் பணிக்கு மொழி நூல் வல்லார்களை அரசு அழைத்து ஊக்குவிக்க வேண்டும். தாய் மொழியில் பாடம் பயிலும் மாணவர்களின் வாழ்க்கை, நூலில் கட்டிவிடப்பட்ட பட்டமாகக் காற்றடிக்கும் திக்கு நோக்கிச் செல்லவிடக்கூடாது. அரசு அலுவலக வேலை களில் அவர்கள் அச்சப்படும் நிலையும், அஞ்சுகின்ற நிலையும் இருக்கக்கூடாது. பயிற்று மொழியால் பற்றும் பயனும் பெறும் வாய்ப்புகள் வளர வேண்டும். இந்நிலை அமையுமானால் தமிழ் அருங்கலைகள் பல பெற்று அனைத்துலக அறிவியல் நூற்கள் பெற்று உலகம் வியக்க வாழும் வகை பிறக்கும்.

ஒருவன் எந்தக் கருத்தையும் தெளிவாக விளக்கவும் விளங் கிக் கொள்ளவும் அவனுடைய தாய் மொழித் துணையே பெரிதும் பயன்படும். இனிமையும் எளிமையும் பயப்பது அம் மொழிதான்.

நான் குடந்தை அரசினர் கலைக் கல்லூரியில் பொருளியலைப் பயிற்று மொழிப் பாடத்திட்டத்தின்படி விரும்பியேற்றுப் பயின்று வருகிறேன். என்னுடன் பதினேழு இளம் தமிழ் நெஞ்சங்கள் தம் எதிர்கால வாழ்வைப் பற்றிய நினைவு சிறிதுமின்றி எந் தமிழ்க்கு இன்னல் வரினும் எமக்கு வந்ததுதான்; எங்களால் எள்ளள வேனும் எம் தாய்மொழிக்குப் பயனுண்டென்றால் அதையே வாழ்வின் பயனாகக் கருதுவோம் என்று திண்ணிய எண்ணத்துடன் பயிலுகின்றனர் இதில் சிறப்பிற்குரியதும், மகிழ்ச்சிக்குரியதும் என்னவெனில் எங்கள் பதினெண்மரில் அறுவர் மகளிராவர். எங்களுக்கு அரசினரிடமிருந்து திங்கள் தோறும் உருபா 30 கொடுப்பதாகச் சொல்லப்படுகின்றது என்றாலும் இது தூண்டிற் புழுவுண்ட மீனுக்குக் கிடைக்கும் பயனாகத்தான் இன்றுவரை இருக்கிறது.

இருந்தும் நாங்கள் எங்களுடைய அரசியல் (Politics) வரலாறு (History) பொருளியல் (Economics) பாடங்களைத் தமிழில் பயிலும் பொழுது எங்களை அறியாமல் தமிழ் இன்பம் காணுகிறோம். நாங்கள் எத்தனை சுவையும் பயனும் பெறுகிறோம் என்பது எங்களுக்கும் எங்களின் பேராசிரியப் பெருந்தகைகளுக்கும்தான் தெரியும். "கற்க கசடற" என்ற குறள் நெறிப்படி எங்களுக்கு எழுகின்ற ஐயங்களை அச்சமின்றி ஆசிரியர்களிடம் வினா எழுப்பி விளங்கிக் கொள்கிறோம். அவர்களும் இன்முகத்தோடும், உவகை தோயும் உள்ளத்தோடும் உரையாடி விளக்குகிறார்கள். எங்களுக்கு வகுப்பிலே தமிழின் உணர்வாய் ஒரு தனித் தன்மை பிறந்திருப்பதைக் காண்கிறோம். கட்டுப்பாட்டுணர்ச்சியும் ஒழுக்கமும்நிறைந்தவர்களாக வாழ வேண்டுமென்ற எண்ணமும் பிறக்கிறது. ஒரு மணி அளவுதான் ஒரு வகுப்பு என்றாலும் – அந்நேரத்தில் ஓராண்டுப் பயனையும் செய்திகளையும் எங்களுக்கு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கிறார்கள். அன்னைமொழி வளர ஊக்கத்தையும், உணர்வையும் ஊட்டும் தூண்டு கோலாக எங்களது வகுப்பாசிரியர்கள் விளங்குகிறார்கள். தனித்தமிழில் பயிற்றுவிக்கவும் முயற்சி செய்கின்றனர்.

எங்களின் பெருமதிப்பிற்குரிய கல்லூரி முதல்வரவர்களும், மற்ற பேராசிரியப் பெருந்தகைகளும், மாணவ நண்பர்களும் எங்களுக்கு உறுதுணையாகவே விளங்குகின்றனர். மாணவர்கள் தாய்மொழியில் பாடம் கேட்கும் விருப்பிருந்தும், பொருளியல் பின்னணியால்தான் வேற்றுமொழி படிக்கவேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்கள் என்பதையும் எங்களால் உணரமுடிகிறது.

இடர்ப்பாடுகள் எதுவரினும் இன்முகத்தோடு ஏற்கக் கடப்பாடுடையவர்கள் நாங்கள். தனித்தமிழ் சிறக்கப் பாடுபடுவேன் என்ற உறுதியோடு முடிக்கின்றேன்.

சாம்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் – என்
சடலம் தமிழ் மணந்து வேகவேண்டும். *

சாதலெம் கடனே!

யாமே, காதலர்ப் பித்துடை யேமே
காமம் விதும்பிய தலைநாட் போலத்
தமிழென் பொழுதில் தாம்விதும் பினமே.
உயர்தனித் தமிழெம் மொழியே; உலகிடைப்
பெயர்முதல் நிறுத்ததெம் பெருந்தமி ழகமே.
ஒட்பங் கெழீஇய உயர்நா கரிகத்
திட்பஞ் சிறந்ததெம் தென்றமிழ்க் குடியே,ஆங்குத்
தமிழ்ப் பிறப்பெண்ணின் தலைநிமி ரும்மே!
தமிழ்ப்பெயர் உரைப்பின் உளங்குளி ரும்மே!
தமிழ்மறம் காணின் தோள்கலிக் கும்மே.
தமிழிசை மடுப்பின் செவிசெருக் கும்மே.
இமிழ்திரை உலகிற் கிறும்பூ தூட்டிய
தமிழ்மறை ஓதின் மெய்சிலிர்க் கும்மே.
செம்மாந் தோங்கிய செஞ்சொற் புலமைத்
தமிழ்நெஞ் செண்ணில் பெருமிதம் மிகுமே.
பிழையாச் செங்கோல் பீடுற ஓச்சி
வழுவா நெறியின் குடிபுரந் தோம்பிய
எந்தமிழ் வேந்தின் இசைகெழு வாழ்வை
நூலிற் கற்பினும் நுவலக் கேட்பினும்
கூத்தினுந் திரையினுங் குறையறக் காணினும்
விரிதமிழ்ச் செருக்கால் விம்முமெம் நெஞ்சே!
ஊறுங் குருதியும் தமிழெனின் உயர்மே!
ஆதலின், தமிழ்க்குறு தீங்கின் துடிக்குமெந் தோளே
தமிழ் நலங் காக்கத் தாவுமெம் உளமே
தமிழ்க் குடி புரக்கத் தணலுமெம் முணர்வே
வாழ்தலுந் தமிழ்க் கென வாழ்ந்து
காதலெந் தமிழ்க்குச் சாதலெங் கடனே!

ம. இலெ. தங்கப்பா, எம். ஏ.

உயர்வின் இலக்கணம்?

THE CHARACTERISTICS OF GREATNESS

நாம் தொடங்கிய எச்செயலிலாவது, ஆராய்ச்சியிலாவது முழுமையினை எய்த விழைவோமாயின் நம் ஆற்றலுக்கு அப்பாற் பட்டதாகிய ஓரிலக்கையே நம் முன் நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். நம் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், ஆய்வு நாட்டத்துக்கு உயிரூட்டுவதாகவும் அவ் இலக்கு அமைதல் வேண்டும். மற்றவரினின்றும் வேறுபட்டு, பிறர் அடிச்சுவடுபடாத வழியில் நாம் நடையிடுவோமாயின் நாம் எடுத்த குறிக்கோளை இறுதிவரை எய்த முடியாவிட்டாலும், இடைநிலையிற் பல்வேறு புதிய உண்மைகளை நாம் கண்டறியக் கூடும். எளிதின் பெறக் கூடிய சிறுநலங்களினும், நம்பிக்கையைத் தூண்டக்கூடிய செயற்கருஞ் செயல்களே பெரிதும் இன்பம் விளைவிப்பனவாம்.

செயற்கரிய செய்யும் இவ்வூக்கத்தினை இக்காலத்திற் காண்பதரிதாயிருக்கின்றது. புளித்துப்போன கருத்துகளை உதறித் தள்ளியும், கூறியது கூறலை ஒதுக்கியும் மெய்யறிவு நாட்டத்தில் முனைபவன் இக்காலத்தில் ஏதோ வியப்பானபிறவியாகக் கருதப் படுகின்றான். அவனைக் குறைகூறவும் அவன்மேல் ஏசற்கணைகளை வீசவும் பலர் முன் வருகின்றனர். பழைய எண்ணங்கள் உறுதியில்லாதவை என்று யார் கூறமுடியும்? அவை உறுதியுள்ளனவே! அவற்றை எதிர்ப்பதாவது! நடக்குமா அது? முன்னுள் பெரும் புலவர்களை யாரால் விஞ்சமுடியும்? அவர்களை அடியொற்றி நடப்பதை விட்டுவிட்டுப் புதுமையாவது ஒன்றுவது? — இவ்வாறு அவர்கள் எதிர்ப்பைக் கிளப்புகின்றனர்.

இக்காலத்தின் அறிவு நாட்டத்தை என்னென்றுதான் சொல்வது! ஒருபுறம் மனத்தில் அறிவொளியைத் தூண்டுவதாயினும் மறுபுறம் மனத்தை மிக நொய்மையானதாக்கி விடுகின்றது. செயற்கரிய செய்யும் ஆற்றலை வலுவிழக்கச் செய்து விடுகின்றது. மாந்தரெல்லாம் 'நமக்கேன் வம்பு' என்று உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதோடு நிறைவுபெற்று விடுகின்றனர். புதிய எண்ணங்கட்கு இந்நிலை வழி வகுக்காவிடினும், இருப்பதை இழக்காமலிருப்பதற்கு நல்ல வழிதான். ஆயினும், தடம் பிறழ்ந்து நடக்கவும் புதிய எண்ணத்தையோ புதுமுறையையோ வெளியிடவும் அஞ்சியடங்கியிருக்கும் ஓர் ஆசிரியன் ஒருபோதும் முழுமையின் முதற் படியைக்கூடக் காண முடியாது. நண்பர்களின் வறட்டுப் புகழுரைகளும் ஆய்வாளர்களின் சப்பென்ற பாராட்டுதல்களும் வேண்டுமானால் அவனுக்குக் கிடைக்கக்கூடும். எனினும் உண்மையை மட்டும் அவனால் காண முடியாது.

யாராலும் குறை கூறப் பெருமல் இருந்து விடுவது நிலைத்த புகழுக்கு வழி வகுக்காது. அழகிய, உயர்ந்த தனிமைச் சிறப்பே புகழுக்கு நிலைக்களம். செவ்விய உயர்நிலை எய்த விழையும் ஓராசிரியனின் எண்ணங்கள் சில வேளை நகைப்புக் கிடமாகவும் கூடும். எனினும் இறுதியில் பெறும் வெற்றி முன்பு பல முறை பெற்ற தோல்வியின் துன்பத்தையும் நீக்கிவிடல் கூடுமே!

அறிவியல் துறையில் இன்னும் கண்டுபிடிக்கப்படவேண்டியன எவ்வளவோ உள. அவற்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பலர் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு புதிய முயற்சியும் பிற்கால முயற்சிகட்குக் கால்கோலச் செய்கின்றது. மெய்ப் பொருளைச் சடக்கெனக் கண்டுகொள்ள முடியாமற் போனுலும் ஆயுங்கால் எவையாயினும் புதிய உண்மைகள் வெளிவராமலா போகும்? இன்று நம்மிடையே இருக்கும் திறமைமிக்க மாந்தர்கள் மற்றவர்களின் எண்ணங்களை ஆராய்ந்து அவர்களையே பாராட்டிக் கொண்டிருப்பதைவிடத் தனக்கென ஒரு வழி வகுத்துக் கொண்டு, இதுவரை செய்யாத புது ஆய்வினைச் செய்தால் அவர்கட்கு நல்லதொரு சிறப்புக் கிட்டுமே!

பொதுவாக முன்னேடிகள் பல துறைகளிலும் மதிக்கப் பெறினும் இலக்கிய உலகில் மட்டும் மதிக்கப் பெறுகின்ருரிலர். அவர்களின் ஆராய்ச்சி தவருயின் அவரைக் குறைகூறி எள்ளி நகையாட முட்டாள்கட்குப் பஞ்சமில்லை. சரியாகவிருப்பினே, அறிஞர் எனப்படுவோர் தங்கள் மதிப்பும் புகழும் குறைந்ததாகக் கருதி, எவ்வழியிலாவது அவர்களை எதிர்த்தொழிக்க முற்படுகின்றனர்.

உண்மை உயர்வை எய்த விழைந்தால், நம் மதிப்பையும் நண்பர்களையும் நமக்கிருக்கும் எல்லாவற்றையும் தூக்கி எறியத் துணிய வேண்டும். சிற்றறிவே (Mediocrity) போதுமென்ருல் எதையும் இழக்க வேண்டுவதில்லை. நம்மால் எப்பயனும் விளைவதுமில்லை. விழிப்புணர்ச்சியும் உயர்வும் இருவேறு திசைநோக்கிச் செல்லும் இருபாதைகள். விழிப்புணர்ச்சி, போதுமென்ற எண்ணத்தை நமக்களித்து நம் தற்கால நிலையோடு நாம் நின்றுவிடச் செய்கின்றது. உயர்வுள்ளம் நம்மை மேனிலைக் கழைத்துச் செல்கின்றது. உணர்வின் பேரின்பமன்றி வேறு மகிழ்வு அதற்கில்லை. விழிப்புணர்ச்சி பொதுமக்களைப் பின்பற்றி உலகோடுலகாக எண்ணிச் செயலாற்றவே நம்மைத் தூண்டுகிறது. ஆனல், உயர்வு மக்கட் கூட்டத்தினின்று விலக்கி, அறியாமை அம்புகட்கும் பொருமைக் கண்கட்கும் நம்மை இலக்காக்குகின்றது.

அரசு வரலாறு

பண்டைத் தமிழர் ஆணை அமைப்பு.

அரசனுடைய ஆட்சிக்கு அடிப்படைத் துணையாயிருந்த ஆணைச் சுற்றம் ஐம்பெருங் குழு என்பது. அமைச்சர், வேள்வியர் (புரோகிதர்), படைத்தலைவர், பன்னர் (தூதர்), ஒற்றர் என்னும் ஐந்து குழுவாரின் பெருந் தொகுதியே ஐம்பெருங் குழுவாகும். இதற்கடுத்தபடி எண் பேராயம் இருந்தது. கணக்கர், கருமர், கருவூலர், நகரப் பெருமக்கள், காலாள் மறவர், யானை மறவர், இவுளி (குதிரை) மறவர் என்னும் எட்டுக் கூட்டத்தாரின் பெருந் தொகுதியே எண் பேராயமாகும்.

அரசனுடைய நன்மையையும் உடல்நலத்தையும் உண்மையாகப்பேணுதற்குத்தேர்ந்தெடுக்கப்பட்ட படைத்தலைவர், நிமித்திகர், மருத்துவர், நட்பாளர், அந்தணர் ஆகிய ஐந்திறத்தார் சேர்ந்த குழு உறுதிச் சுற்றம் என்ற பெயரில் இயங்கியது. அரசனில்லாத அல்லது அவன் கடுநோய்ப்பட்டபொழுது அரசியலைக் கவனித்தற்கு, ஆசான், பெருங்கணி, அறக்களத்தந்தணர், காவிதி, மந்திரக் கணக்கர் ஆகிய ஐந்திறத்தார் குழு அரசுப் பொறுப்புச் சுற்றம் என்னும் பெயரில் இருந்தது.

அரசன் கூறும் ஆணைகளை நேரில் கேட்பவருக்குத் திருவாய்க் கேள்வி என்றும், அவர் அறிவித்த ஆணையை எழுதுவார்க்குத் திருமந்திர வோலை என்றும், அவ்வாணை எழுதுவார் தலைவனுக்குத் திருமந்திர வோலை நாயகம் என்றும் பெயர். அரசவாணைகளைச் செயற்படுத்தும் (Secretarial Staff) ஆணைச் சுற்றத்தார்க்கு வாயிற் கேட்போர் என்று பெயர். அவர் வழி வரும் ஆணைக்கு வாய்க் கேள்வி என்றும் அதை நிறைவேற்றுவார்க்கு வாய்க் கேள்வியர் என்றும் பெயர். நாள்தோறும் அரசவையில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் எழுதி

(முன் பக்கத் தொடர்ச்சி)

சிற்றறிவின் பயன் உடனே கிடைத்து விடுகின்றது. உயர்வுள்ளலின் பயன்இதற்கு நேர்மாறாக இருக்கின்றது. சிற்றுள்ளம் தன்னல நோக்குடன் புல்லர்தம் எண்ணங்களைப்பற்றி எண்ணி அவற்றையே எழுதுகின்றது. பேருள்ளம், உலகப் பெரு நோக்குடன் பழம்பாதை விலகித் துணிவுடன் முன்னேறுகின்றது.

உயிர்ப்பு: ஆலிவர் கோல்டுசிமித்.

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

வைப்பான் பட்டோலைப் பெருமான் எனப்பட்டான். மேனிலை ஆணையர் வழிவந்த ஓலைகட்குத் தக்க விடைகளை எழுதியனுப்பு வார்க்கு விடையில் என்றும், அக் கூட்டத் தலைவர்க்கு விடை யதிகாரி என்றும் பெயர்.

தண்டப்படும் வரிகளைப் பதிவார்க்கு வரியிலார் என்றும், தண்டிய வரிகளைச் செலவுகட்குப் பகுத்தொதுக்குவார்க்கு வரிக்கூறு செய்வார் என்றும், ஊர்களினின்றும் வரும் நிலவரிக் கணக்கு வைப்பார்க்கு வரிப் பொத்தகம் என்றும், அவர் தலைவ னுக்கு வரிப் பொத்தகக் கணக்கு என்றும், நிலவரியின்றிப் பிற வரிகளைக் கணக்கு வைப்பார்க்குப் புரவுவரி என்றும், அவரில் தலைமைக் கணக்கனுக்குப் புரவுவரிச் சீகரணம் என்றும், அவர் தலைவனுக்குப் புரவுவரித் திணைக்கள நாயகம் என்றும் பெயர். இவரல்லாது வரியிலீடு, புரவுவரித் திணைக்கள முகவெட்டி என்றும் இரண்டு ஆணையர் இருந்தனர். சேரநாட்டு அரசிறை யாணையர் பாட்டமாளன் என்றும், அரசியற் கணக்காணையர் மேலெழுத்துக் கணக்கு என்றும் பெயர் பெற்றிருந்தனர். மணி யறிவிப்பார் நாழிகைக் கணக்கர் எனப் பெற்றார். அரசவா ணையை முரசறைந்து ஊர்க்கறிவிப்பான் வள்ளுவன் எனப் பெற்றான்.

அரண்மனைப் பொதுக் கருமத் தலைவனுக்கு மாளிகை நாய கம் (Senescnal or Chamberlain) என்றும், அரண்மனைக் கணக்கெழுதுபவனுக்குத் திருமுகக் கணக்கு என்றும் பெயர் அரண்மனை வேலையாட்கள் அகப்பரிவாரம் என்றும், அரசனொடு நெருங்கிப் பணி செய்வார் அணுக்கச் சேவகம் என்றும், அரச னுக்கு மிக அண்மையிலிருந்து வேலை கேட்பார் உழைச் சுற்று ளர் என்றும் அழைக்கப் பெறுவர். அரசனுக்குக் கவரி ஆல வட்டம் முதலியன வீசுவாரும், குடை கொடி முதலியன பிடிப் பாரும் அடையாளக்காரர் எனப்படுவர்.

அரசனின் பழம்புகழ் பாடி அவனுக்கு மறவுணர்வுகளைக் கிளர்ந்தெழுமாறு பல்வகை உரைகளையும் கூறுவார் மாகதர், சூதர், வைதாளிகர் எனப்படுவர். நின்றேத்துவார்க்குச் சூதர் என்றும் இருந்தேத்துவார்க்கு மாகதர் என்றும்பெயர். அரசனைத் துயில் எழுப்புவார் அகவர் எனப்படுவர். படைகளுக்கு அரச வாணைகளை அறிவிப்பானைப் படையுள் படுவோன் என்பர். அரச வருகைகூறி மக்களை விலக்குவானுக்குக் கட்டியங்காரன் (Herald) என்று பெயர். வெளிப்போகும் வழி அரசனுடன் வரும் வினைக்கூட்டத்தார்க்கு உடன் கூட்டம் என்றும் உழையர் என்றும் பெயர். பணியாட்களைக் கொண்டு அரசவாணைகளைச் செய்விப்பானுக்குக் கருமிகள் என்றும், இவர்களை ஏவி நடத்து வார்க்குக் கரும விதிகள் என்றும் பெயர்.

— ஞா. தே.

ஓர் இலக்கியக் காட்சி

முல்லையின் சிரிப்பு.

(மாரி-அறவாழி.)

முற்றத்தில் அமர்ந்திருந்தாள் அவள். அவளது கண்கள் வானத்தில் நிலைத்திருந்தன. குமுறிக் கொண்டிருந்த இருண்ட வானம், உலகையே அழித்துவிட முடிவு செய்துவிட்டதுபோல் அச்சுறுத்திக் கொண்டிருந்தது. விரட்டப்பட்ட வெள்ளாட்டு மந்தையைப்போல், கார்முகிற் கூட்டம் வானமெங்கும் சிதைந்து கிடந்தது. வெட்டி முழக்கும் மின்னல் தொடர் வெறி மிகுந்து நெளிந்தோடியது. ஊழிக் கூத்திற்கு வரவேற்பளிப்பதுபோல் முழங்கிக் கொண்டிருந்தது இடி!

இயற்கையின் வெறியாட்டத்திலேயே நிலைத்திருந்த அவளது கருத்தை, வெண்கல மணியொலி ஈர்த்தது. கண்களைத் திருப்பினாள். தெரு முனையில், ஆயச் சிறுவன் ஒருவன் மேய்ச்சலிலிருந்து திரும்பும் மந்தையை விரட்டிய வண்ணம் வந்து கொண்டிருந்தான். அவன் தோள்மீது ஒரு பெரிய பாற்குடம் நுரை தளும்பி வழிந்து கொண்டிருந்தது.

அக்காட்சியைக் கண்டு, அவள் நெஞ்சில் அதுவரை அடங்கிக் கிடந்த துயரம் மீண்டும் தலை தூக்கியது. வாழ்க்கையின்மேல் வெறுப்பு உண்டாயிற்று. நெடிய பெருமூச்சு நெஞ்சைக் கசக்கிக் கொண்டு வெளியேறியது. ஏக்கத்துடன் விழிகளைச் சுழற்றினாள். ஏமாற்றம்! ஏமாற்றம்!... எங்கும் ஏமாற்றம்! எரிச்சலுடன் அவ்விடம் விட்டகன்றாள். மழைத்துளிகள் 'சட சட' வென்று காய்ந்த புழுதிப் பரப்பின்மேல் விழுந்தன. புறக்கடையில் உலர்த்தியிருக்கும் துணிகளை எடுத்து வைப்பதற்காக உள்ளே ஓடினாள் அவள். தோட்டத்தில் பூத்திருந்த முல்லை அவளைச் சிரித்த முகத்துடன் வரவேற்றது. அதைக் கண்டு அவளுக்கு மகிழ்ச்சி பிறக்கவில்லை. மாறாக எரிச்சலே பொங்கியது. அது அவளை மகிழ்விக்கவா அங்கு அரும்பியிருக்கிறது?... இல்லை! இல்லை! தனித்த அவளது கழிவிரக்க நிலையைக்கண்டு எள்ளி நகையாடவன்றோ அரும்பியிருக்கிறது!

அவள், வெறி கொண்டவள்போல் முல்லைக் கொடியருகே ஓடினாள். கொழு கொழுவென்று வளர்ந்து தழைத்துப் படர்ந்திருந்த அதனை முறித்தெறிந்தாள். அதன் மலர்களைப் பிய்த்து மண்ணில் வீசினாள். தூறிக் கொண்டிருந்த மழை பெரு மழையாக மாறியது. வீட்டிற்குள் திரும்பி விடுகிறாள். வீட்டினுள்

கவிந்த இருளை அகற்ற விளக்கேற்றினாள். ஆனால் அவள் நெஞ்சிலே விரவிக் கிடந்த இருள்?... அதை அகற்றுவது யார்? உண்பதையும் வெறுத்துப் படுக்கையில் உடலைக் கிடத்துகிறாள். அவள் கண்கள் மூட மறுக்கின்றன. கொன்றை மலர்களின் மணம் காற்றில் கமழ்கிறது. தொலைவில் எங்கோ, ஏறங்கோட் பறையின் முழக்கம் கேட்கிறது. அடுத்த தெருவிலிருக்கும் ஆடல் மகள் ஒருத்தியின் வீட்டிலிருந்து யாழோசை தவழ்கிறது ஆம்!... சாதாரிப் பண்ணை முல்லை யாழில் எவரோ மீட்டுகின்றனர். அவற்றையெல்லாம் கேட்கக் கேட்க அவளது துன்பமே மிகுந்தது.

ஆம்! குளிர் நடுக்கும் மழையிரவில், அருகில் இன்ப மொழி பேசியிருக்கவேண்டிய அவள்கணவன் அங்கு இல்லை! அவளைக் கைப்பிடித்த இரண்டு திங்கள்கட்குள்ளேயே, வணிகத்தின் பொருட்டு வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. கார் காலத் துவக்கத்தில் திரும்பி விடுவதாக உறுதியளித்துவிட்டுச் சென்றான். அவள் காத்திருந்தாள். 'கார்' வந்தது. ஆனால் அவன் வரவில்லை. அவள் எதிர்பார்த்தாள்! ஏமாந்தாள்! வேதனைக் கடலில் வீழ்ந்தாள்!

''ஒரு வேளை என்னை மறந்திருப்பாரோ? ..'' அவள் நெஞ்சில் இத்தகைய ஒரு வினாவும் எழுந்தது. உடனே உள்ளத்தில் காட்டுத் தீ பற்றிக்கொண்டது போன்ற துன்ப உணர்வு! பஞ்சணை நெருஞ்சி முள்ளாகக் குத்தியது! தூண்டில் மீனைப்போல் துடித்தாள்.

யாரோ கதவைத் தட்டுவதுபோல் ஒலி கேட்டது இமைகள் பொருந்தாமல் துடித்துக் கொண்டிந்தவள் துள்ளி எழுந்தாள். பாய்ந்தோடிச் சென்று கதவைத் திறந்தாள். ஆவலுடன் பார்த்தாள். ஆனால் அங்கு யாரும் காணப்படவில்லை. கண்களைக் குருடாக்கும் மையிருட்டுத்தான், எங்கெங்கும் மண்டிக் கிடந்தது; திகைத்து நின்றாள்.

கதவைத் தட்டுவதுபோன்ற ஒலி மீண்டும் கேட்டது. வியப்புற்று இருளை ஊடுருவி நோக்கினாள். அருகிருக்கும் மரத்தில் ஒரு மரங்கொத்திப் பறவை கிளையினைக் குடையும் ஒலி அது. எல்லையற்ற ஏமாற்றத்துடன் மீண்டும் வந்து படுக்கையில் விழுந்தாள் தன்னையறியாது உறங்கியும்விட்டாள்.

அடிவானத்தில் தோன்றிய இளஞாயிற்றின் மென் கதிர்கள் அவளைத் தீண்டி யெழுப்பின. திடுக்கிட்டெழுந்தாள். வாயிலுக்கு விரைந்தோடினாள். தெருவின் இரு முனைகளிலும் எதையோ தேடினாள். ஒன்றும் காணாதது கண்டு வெட்கினாள்.

தன் காதலனின் தேர் விரைந்தோடி வந்து தெரு முனையில் திரும்புவதாக சற்றுமுன், கண்ட காட்சியெல்லாம் வெறும் கனவு என்பதை அப்போதுதான் உணர்ந்தாள். சோர்வுடன் திரும்பினுள். உரிய வேளையில் தோழி வந்தாள். அவளிடம் தலைவி தன் கனவைக் கூறினுள். தோழி ஏதோ சொல்லி ஆறுதல் செய்ய முயன்ருள். ஆனுல், ஆற்று வெள்ளத்தைக் கையால் அணை போட்டு நிறுத்த முடியுமா?

வெம்பகல் காய்கிறது. உடல் முழுதும் பசலை படர்ந்து, மெலிந்து, அணிகள் இழந்து மங்கிய ஓவியமாய், தரையில் தொய்ந்து கிடக்கிருள் அவள். தேரின் வெண்கல மணியொலி எங்கிருந்தோ மிதந்து வருகிறது. அதைச் செவியுற்று அவள் பரபரப்போ ஆர்வமோ அடையவில்லை. அந்தத் தேரில் வருபவன் தன் காதலனுக இருக்கமுடியாது என்றெண்ணுகிருள் "அந்தக் கொடியவனுக்கு இவ்வளவு விரைவில் வீட்டு நினைவு வந்து விடுமோ?" அவள் தனக்குள் முணகிக் கொள்கிருள்.

"பட் பட் பட்" என்று கதவு தட்டப்படுகிறது. அப்போதும் அவள் எழவில்லை. அது மரங்கொத்தியின் திருவிளையாடல் என்று எண்ணுகிருள் அதைத் தொடர்ந்து அவளைப் பெயரிட்டு யாரோ அழைக்கின்றனர். ஆ! அந்தக் குரல்?.. ?...ஆம்! அவள் காதலன் குரல்தான் அது!

துள்ளி எழுந்தோடிக் கதவைத் திறக்கிருள். ஆசைக் கடலாய் வெளியே நிற்கிருன். இருவரும் தழுவிக் கொள்கின்றனர். அன்றில் இணைபோல் உடலும் உயிரும் ஒன்ருய்க் கலந்து நிற்கின்றனர்.

நெடுநாள் பிரிவின் ஏக்கம், களிப்பு ஊற்ருய்ப் பொங்குகிறது ஆடலென்ன, பாடலென்ன, விருந்தென்ன, விளையாட்டும் சிரிப்புமென்ன!

மாலை வரை தழுவிக்கிடந்த காதலர் எழுகின்றனர். மேலை வானத்தின் எழிற் கூத்தைக் காண விரும்புகின்றனர். அப்படி இருவரும் ஒன்று சேர்ந்து நுகர்ந்து எத்தனையோ நாட்களாகின்றன அல்லவா! இருவரும் புத்தாடை அணிந்து, அணிகள் பூண்டு, குழல் கோதி முடித்து, மலர்சூடி, மார்பகங்களில் ஆரக் கலவைக் கோலம் எழுதி எழிலோவியங்களாய்த் தோட்டத்திற்குப் புறப்படுகின்றனர்.

புழக்கடையில் கிணற்று மேடையில் நிற்கின்றனர். உரிமையோடு அவன் மார்பில் சாய்ந்து கொண்டு பேசுகிருள் அவள்.

"..இத்தனை நாட்களும் என்னை எப்படி மறந்திருந்தீர்கள்? வாணிகத்திலேயே மூழ்கிவிட்டீர்களோ?..."

"...ஆம்! உண்மைதான். ஆனால் ஒரு பொழுதும் உன்னை மறந்திருக்கவில்லை..."

"...பொய்!... மறந்திருக்காவிடில் குறித்த காலத்தில் வந்திருக்கமாட்டீர்களோ?... "கார்" வந்தது கூடவா தெரியாது போயிற்று?..."

"...ஆம் அன்பே! மெய்யாகவே எனக்கு அது தெரியாமல் தானிருந்தது..."

"...பின் எப்படி அறிந்தீர்கள்?..."

"...அது ஒரு கதை!... நேற்றுமாலை, தொழிலைப் பற்றிய நினைவிலேயே மூழ்கியவண்ணம், ஒரு காட்டுவழியில் உலவிக் கொண்டிருந்தேன். அப்போது தற்செயலாக முல்லைக்கொடி ஒன்று என் கண்களில் பட்டது. அதைக் கண்டவுடன் தான் கார்காலத்தின் வரவை அறிந்தேன். உன்னை நினைத்துக் கொண்டே அதை ஆசையோடு நோக்கினேன். கொடியில் நிறைந்திருந்த அரும்புகள் என்னிடம் என்ன கூறின தெரியுமா?... "கல்நெஞ்சனே!... கார்காலத்தில் வந்துவிடுவதாகக் கூறி வேற்றூர் புறப்பட்டாயே, இப்பொழுது குறித்த காலம் வந்த பிறகும் ஏன் போகாமலிருக்கிறாய்?... உன் நினைவால் ஏங்கி ஏங்கி உயிர்விட்டுக் கொண்டிருக்கும் உயிர் ஒன்று அங்கு இருப்பதை மறந்தாயா?... உடனே ஓடு... உம்!...புறப்படு..." என்று இடித்துரைத்தன. தனியே நின்றிருந்த என்னைப் பார்த்து நகைத்து ஏளனம் செய்தன. அதனால் உடனே இங்குப் புறப்பட்டேன்..."

கதையைக் கேட்டுக் கொண்டிருந்த தலைவி வியப்புடன் "அப்படியா?" என்றாள்.

அதற்கு அவன் "ஆம்!... அந்த முல்லையின் உதவியால் தான் நாம் இன்று ஒன்று கூடினோம். எனவே நாம் அதற்கு நன்றி செலுத்த வேண்டாமா? . வா... தோட்டத்தில் பூத்திருக்கும் முல்லையைக் கண்டு வணங்கி அதற்கு நன்றி கூறி வருவோம்..." என்று கூறி அவளை இழுத்தான்.

அவள் கண்கள் கலங்கிய வண்ணம் அவனைத் தடுத்தாள். அவள் முகத்தை ஏறிட்டு நோக்கிய அவன் வியந்தான். "ஏன் கண் கலங்குகிறாய்?" என்று கேட்டான். அதற்கு அவள் "தோட்டத்தில் 'முல்லை' இல்லை. நான் பிடுங்கி எறிந்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். கார் காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தாங்கள், குறித்த காலம் வந்தும், வராமலிருந்த கொடும் செயலால் நான் ஏங்கி நின்றபோது, அது

ஆவணி இதழ்த் தொடர்ச்சி. மெய்யறிவியல்.
Philosophy.

கல்வி

ஆங்கிலத்தில்: விவேகானந்த அடிகள்.
தமிழில்: 'வழுதி'

உலகமே முழுமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அம்முழுமையைப் பலர் பல பிறவிகளில் அடைகின்றனர். சிலர் ஒரே பிறவியில் அடைந்துவிடுகின்றனர். அத்தகையோரே அருட் பெரியார்களாகின்றனர். நாம் உண்மையாக எண்ணி முயன்றால் அவரைப்போல் நாமும் முழுமையெய்தும் வளர்ச்சியை விரைவுபடுத்திக் கொள்ள முடியும். இயற்கையாக வளரும் செடியை நாம் கண்காணித்துக் காத்துவந்தால் அதன் வளர்ச்சியை விரைவு படுத்த முடியும். மாந்த இனத்தின் வளர்ச்சியையும் அவ்வாறே செய்யலாம். அவ் விரைவுக்கும் நாம் அளவு அமைக்கமுடியாது. இவனுக்கு இவ்வளவுதான் என்று யாரும் எல்லை அமைக்க முடியாது. அவனவன் வளர்ந்துகொண்டேயிருக்கத் தடை செய்தல் கூடாது; அவ்வளவே! அருட்பெரியார் தம் வாழ்க்கைகளை நமக்குக் காட்டாகக்கொண்டு நாம் வளர வேண்டும். மன ஒருமைப் பயிற்சியின் பயன் எல்லாம் முழு நிறை மாந்தனை, இயற்கையின் நெடுங்கால வளர்ச்சிக்கு விட்டு விடாமல், விரைவிலேயே உருவாக்குவதுதான். புறவுலகின் இயக்கங்கட்கு ஆட்பட்டு அலைகளில் மிதந்து செல்லும் சிறு மரத்துண்டுபோல் அலையவிடாமல் தடுத்து நிறுத்தி வளரச் செய்வதுதான். இதுவே உண்மைக் கல்வியாகும்.

ஆசிரியரும் மாணுக்கரும் கலந்து பழகிய பழங்காலத்துக் கல்வியே சிறந்ததென்பதென் கருத்து. சுடர்ந்து கனன்றுகொண்டிருக்கும் பண்பு நலன்கொண்டு, தான் புகட்டும் உயர்ந்த அறிவுரைக்கெல்லாம் தானே எடுத்துக்காட்டாக விளங்கும் ஆசிரியருடன் இளமை முதலே வாழ்ந்து பழகுதல் வேண்டும். முன் காலத்தில் துறவிகளே ஆசிரியராகவிருந்தனர். தற்போதும் தம்மை ஈகம் செய்ய அணியமாயிருப்பவரிடத்தில்தான் ஆசிரியப் பொறுப்பை ஒப்படைத்தல் வேண்டும். நன் மாணுக்கர்க்கும் நல்லாசிரியர்க்கும் அமைய வேண்டுவன சில உள. மாணுக்கர்க்குத் தூய்மையும், அறிவு வேட்கையும், விடா முயற்சியும் வேண்டும். உள, உரை, உடல் தூய்மை மிக இன்றியமையாதன.

ஆசிரியரோ சமய நூல்களின் உள்ளுயிர்ப்பினை அறிந்தவராக இருத்தல் வேண்டும். சொல்லிலேயே அமிழ்ந்து சொற்க

ளின் போக்கிலேயே மனத்தை அலைய விட்டுவிடும் ஆசிரியன், உள்ளுயிர்ப்பினை நழுவவிட்டு விடுகின்றான். அடுத்து, கரிசின்மையும் ஆசிரியனுக்கு வேண்டிய இலக்கணமாகும். ஆசிரியனின் அறிவுரைகளைச் செவிமடுப்பதை விடுத்து அவன் வாழ்வையும் பண்பையும் ஏன் ஆய்ந்து கொண்டிருக்கவேண்டும் என்று பேசப்படுகின்றது. இது சரியன்று. உண்மையை உணர்தற்கும், உணர்த்துதற்கும் மிக இன்றியமையாது வேண்டப்படுவது உளத்தூய்மையேயாகும். அறிவாற்றலைத் தூண்டுவது மட்டுமன்று, தன்னிடமிருந்து ஒரு வகை ஆற்றலை மாணவன்பால் செலுத்துவதும் ஆசிரியனின் கடனாகும். ஆசிரியனிடமிருந்து ஒருவகை ஆற்றல் புறப்பட்டு மாணவன்மேற் பாய்கின்றது. ஆதலின் ஆசிரியனின் உளத்தூய்மையும் அன்பும் மிக இன்றியமையாதனவாம்.

மாணவனாக இருப்பது எளிதன்று. உண்மையை உணர விரும்புவோர் அவாவினை விட்டொழித்தல் வேண்டும். அவாவுடைய நெஞ்சு உண்மையைக் காண்பதில்லை. உலகியல் அவா நிறைந்த மனத்தில் உண்மை அடியெடுத்து வைக்காது. பொன்னும் பொருளும் உண்மையின் வழியடைக்குந் தடை. செல்வனுக்குத் தன் செல்வமும் வளமும் வாகுமன்றிப் பிறவற்றைப் பற்றி எண்ண நேரமிராது. உள்ளங் கசிந்துருகிக் கலங்காத மாந்தனை நான் நம்பமாட்டேன்... அவன் உள்ளம் கருங்கற் பாறை. உண்மை மகிழ்வும் நலமும் பெறவேண்டின் உண்மை ஒன்றினையே தேடல் வேண்டும்.

தன்னலமின்மையே நற்பயன் விளைவிக்கும்; அதைக் கைக்கொள்ள மக்கட்குப் பொறுமைதான் இல்லை. உடல் நலத்துக்கும் தன்னலமின்மையே துணை. அன்பு, உண்மை, தன்னலமின்மை இவை ஒழுகலாற்றின் வெற்றுச் சொல்லணிகள் அல்ல. நம் உயர்ந்த குறிக்கோள்களாம். அவற்றிலேதான் ஆற்றலின் மலர்ச்சி உளது. தன்னலத்தால் நாம் வெளிப்போக்கும் ஆற்றலினும் தன்னடக்கமே சிறந்த ஆற்றல். வெளியேறும் ஆற்றல் சிதறுண்டு போகின்றது. உள்ளாற்றல் பெருகி வலுப்பெறுகின்றது. தன்னடக்கமே சிறந்து புத்தர் போன்ற பெரியாரை உண்டாக்குகின்றது.

மாணாக்கன் தன் உள், புறப் புலன்களை எல்லாம் அடக்கத் தெரிந்தவனாயிருத்தல் வேண்டும். இயற்கையின் தூண்டுதல்களை மனவலிவால் வெல்லும் நிலையைக் கடும் பயிற்சியால் எய்தல் வேண்டும்... தான் நினைத்தபடியெல்லாம் மனத்தைச் செலுத்த வல்லவனே ஆற்றல்மிக்கவன். அடுத்தது பொறையுடைமை (power of endurance). நன்மையும் தீமையும் ஒன்றெனக்கருதி இடும்பைக் கிடும்பை படாதிருத்தலே வேண்டும்.

அடுத்தது, பற்றறு நிலை; விடுதலை நிலை. வயிற்று வேட்கையும் ஊற்றின்பமும் தாமே இன்றைய உலகமாயிருக்கின்றன! கோடிக்கணக்கான மக்கள் வாழ்வதெல்லாம் அவற்றுக்குத்தாம். இவற்றை மட்டும் அவர்கள் வாழ்விலிருந்து நீக்கிவிட்டால், அவர்தம் வாழ்க்கை பொருளற்றதாகவும் வெறுமையாகவும் போய்விடுமே! ஒரு நொடிப்போது இன்பம் தரும் இவ்வுடலின் அவாக்கள் அளவிறந்த துன்பம் தருவதைப் பலர் அறியாதிருக்கின்றோம். ஒரு துளி அமிழ்துக்காக ஒரு குவளை நஞ்சையும் பருகுவது போலிருக்கின்றது நம் செயல்; எனினும் அவற்றினின்று விடுபட மனமில்லை. ஐம்புலன் அவா அறுத்தலே இத் துயரினின்று நாம் நீங்குதற்கு வழியாம். அக வாழ்வு வாழ விரும்பினால் துறவு வேண்டும். உண்மை தேடும் அவாவே மெய்யானது. அவ்வுண்மைக்காக உலகினைத் துறத்தல் வேண்டும். அப்போதுதான் உய்திபெற முடியும். நம் நோக்கமெல்லாம் உயர்ந்த உண்மையினை அறிவதாகவே யிருத்தல்வேண்டும் நம் குறிக்கோள் பெருந்தகையாயது. நம் வாழ்க்கையே மன வழி வாழ்வாக இருத்தல் வேண்டும். அதுவே நம் குறிக்கோள்.

கல்வியின் உள்ளினும் உள்ளாய் அமைவதே சமயமாகும். இது வெறுங் கொள்கையன்று. என்றும் நிலைக்கும் உண்மை. தொடக்கத்தில் உண்மையை உணர்ந்த அருட் பெரியார் தம் வாழ்க்கையும் குறிக்கோளும் மக்கட்குக் காட்டப் பெறல் வேண்டும். உண்மையை உணர்தற்காக உயிரையும் இழக்க அணியமாகும் நம் பண்டைத் தறுகண்மை மிக்க சான்றோர்களின் துடிப்புள்ள வரலாறே நமக்கு வேண்டும்.

எதிலும், தறுகண்மை மிக்க ஆண்டகைமை வேண்டும். அவ்வாண்டகைமையை நோக்கி நம்மை அமைத்துக் கொண்டால் பிற எல்லாம் தாமே வரும். அக் குறிக்கோளிலிருந்து சற்றும் நழுவக்கூடாது. மன உறுதியை எட்டுணையும் இழத்தல் வேண்டா. உண்பதிலும் உடுத்துவதிலும் ஆடல் பாடல்களிலும் துய்ப்பிலும் உழல்வினும் உயர்ந்த அறத்துணிவைக் (Moral Courage) காட்டவேண்டும். உள்ளத்தில் மெலிவு குடிபுகவிடல் கூடாது.

இறைவனை நம்பாதவனே இறையிலி (நாத்திகன்) என்று பழஞ் சமயங்கள் கூறின. தன்னைத்தானே நம்பாதவனே இறையிலி என்று புதிய சமயம் புகல்கின்றது. தன்னலத்துக்காக நம்புவதன்று இது. நீயே எல்லாமாக இருப்பதால், எல்லாவற்றிலும் நம்பிக்கை வைப்பதாகும். உன்னையே நீ விரும்புவதென்பது உலகின் எல்லா உயிர்களையும் பொருட்களையும் விரும்புவ

(தொடர்ச்சி 76–ஆம் பக்கம்)

இவள் வறுமை!

வறுமைக்கே பிறந்தாளோ? வெட்கம் கெட்ட
வாழ்வுக்கே பிறந்தாளோ? காலம் செய்யும்
சிறுமைக்கே பிறந்தாளோ? பிறக்கும் போதே
சாவோடு பிறந்தாளோ? சாவ தற்குள்
பிறப்புக்குப் பொறுப்பாகப் பிள்ளை யொன்றும்
பெற்றாளோ? பேணுகின்ற, திறனற் றாளோ?
இறப்புக்கே அஞ்சினளோ? மானம் என்ப
திருப்பதைத்தான் மறந்தாளோ? இரக்கின் றாளே!

கொடுப்பவர்கள் உளர்என்ற கணக்குப் போட்டுக்
கொண்டாளோ? குழல்முடிக்க நெய்கி டைக்கும்
உடுப்பதற்குத் துண்டேனும் கிடைக்கும் என்றே
உறுதியொடு நினைத்தாளோ? ஓலம் இட்டுத்
துடிக்கின்ற குழந்தைக்கூண் தருவார் என்று
துணிந்தாளோ? முனிந்தவளைத் 'தூ!தூ!' என்று
நொடிக்கின்ற பேர்களையே கண்ட பின்னும்
நொடியாத நெஞ்சோடு நடக்கின் றாளே!

தெருக்கோடி முனையிலுள்ள குப்பைத் தொட்டி
தேக்கிவைத்த எச்சிலைக்கு நச்சி னாளோ?
சுருக்காத முகத்தோடே இன்சொல் கூறிச்
சுவையான விருந்தளிப்பார்க் கேங்கி னாளோ?
உருக்காத வல்லிரும்பு போல்வார் நெஞ்சும்
உருகிடவே கெஞ்சியுண்டு மாலைப் போதில்
பெருக்காத வெறுந்தரையில் பிள்ளை யோடு
பேருறக்கம் கொள்ளுமிவள் வாழ்வும் வாழ்வோ?

வாய்சிறுத்த தொட்டிக்குள் விழுந்த எச்சில்
வாழையிலை மேற்பரப்பை வழிக்கும் போது
நாய்வந்து போட்டியிடும்! இடுக்கில் வைத்த
நலிந்தஉடல் பரந்ததலைச் சவலைப் பிள்ளை
நோய்வந்த வருத்தத்தால் முணகும்; வற்றல்
முலைக்காம்பைச் சுவைத்தவட்குப் புண்ணுண்
டாக்கும்!
பேய்மக்கள் திரிந்துவரும் தெருவோ ரத்தில்
பெரும்பசிக்குப் போராடி வாழ்கின் றாளே!

மு. மகிழரசன்.

ஆவணி இதழ்த் தொடர்ச்சி

தமிழ் மொழிவழி அரசியல்.

(இது, கலைச் சொல்லாக்கப் புலவர் திரு. கீ. இராம லிங்கனூர் கோவையில் 1958–இல் நடந்த சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் ஆற்றிய உரை. தேவை கருதி ஈண்டு மீண்டும் வெளியிடுகின்றோம்.

— ஆர்.)

பனஞ் சோறு தென்னஞ் சோறு என்றும் சொல்கிறோம். இந்தப் பனைக்கும் தென்னைக்கும் ஊடேசென்று அதற்கு ஊட்டம் தருகிற–அதற்கு வளர்ச்சி தருகிற, பூக்க வைக்கிற, காய்க்க வைக்கிற ஒரு பகுதி இருக்கிறதே அதற்கும் சோறு என்று பெயர். அப்படி ஒரு சோறான பகுதி எது? ஆங்கிலத்திலே சொன்னால் Stable Food என்று சொல்லலாம். நமக்கு Stable Food அரிசி. சில இடங்களில் அரிசிஒரு காலத்திலே சோளம்ஒரு காலத்திலே, கம்புஒரு காலத்திலே Stable Food ஆக இருக்கிறது. அப்படியே சோறு வடநாட்டிலே சில இடங் களிலே கோதுமைச் சோறாக இருக்கிறது. 'ரெயிண்டியர்' சோறாக இருக்கிறது சோறு என்கிற சொல் ஏதோ ஒரு பொருளை வேக வைத்தது மட்டுமன்று. ஓர் அடிப்படையான உணவு Stable Food என்று சொல்கிற அந்தக் கருத்திலே அது இருக்கிறது.

தமிழிலே ஆயத்தம் என்று ஒரு சொல் இருக்கிறது. இது வழக்கில் இல்லை. ஆயத்தம் இப்போது விளங்காது. 'அது தமிழ்ச் சொல் இல்லை; வேறு ஒரு சொல்' என்று சொல்லுகிற ஆட்கள்கூட இருக்கிறார்கள். இப்போது ஆயத்தத்தை விட்டு விட்டோம். 'தயாரைப்' பிடித்தோம். எல்லாம் 'தயார், தயார்'; இப்போது 'சாப்பாடு தயார்' கூடப் போய்விட்டது. எல்லாம் 'ரெடி'யாகிவிட்டது. இப்போது இது வளர்ச்சி என்று சொல் கிறோம். இதுதான் பெரிய வியப்பாயிருக்கிறது. இப்பொழுது வளர்ச்சி, வளர்ச்சி என்று சொல்லப்படுவது இப்படி இருக்கிற நல்ல சொற்களைப் புதைத்து அப்புறப் படுத்திவிட்டு–அதை இழிவு படுத்தித் தாழ்மையாக்கி அது நல்ல சொல் இல்லை என்று ஒதுக்கிவிட்டுப்–பின்னொரு சொல்லைக் கொண்டு வைத்துக்கொள் வது–அந்த சொல்லைச் சில நாட்களுக்கு வைத்துக் கொள்வது; அதை விடுவது இன்னொரு சொல்லைப் பிடிப்பது அதனையும் விடு வது. கண்டது கற்கப் பண்டிதனாவான்; கண்டது தின்னக் குண்டனாவான் என்று சொல்கின்றோம். கண்ட சொற்களை

எடுத்துக்கொண்டால் பெரியமொழியாகுமாம். நம்முடைய மொழி வளரும், வளரும் என்று சொல்லுகிறோம். கண்டதைத் தின்றால் என்ன ஆவான்? என்று தெரியும். குண்டனாவானா அல்லது வேறு ஏதாவது ஆவானா என்றும்தெரியும். இதற்கு ஓர்எடுத்துக் காட்டு பெரிய மேடையிலே பேசுகின்ற பெரிய அறிஞர்கள் மேசையைத் தட்டிப் பேசினார்கள். ஆங்கிலத்தைப் பாருங்கள்! அது பல சொற்களை ஏற்றுக்கொண்டு வளர்ந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். அந்த மொழியின் நிலை என்ன? ஆயிரம் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னே அந்த மொழியின் நிலை என்ன? ஓர் இலக்கியம் அதில் எழுத முடியுமா? பிற சொற்களைக் கடன் வாங்காமல் எழுதியிருக்க முடியுமா? பிற சொற்களைக் கட்டாயம் கடன் வாங்கித்தான் பிழைக்கவேண்டும் என்ற நிலை அதற்கிருந்தது.

ஆங்கிலத்திலே 'பிரியேவுல்ப்' என்ற பழைய நூல் இருக்கிறது. அந்த ஆங்கில நூலை நீங்கள் படித்தால் ஒன்றுமே தெரியாது. படிக்கவே முடியாது வேறே தனிமொழி படிக்க வேண்டும். தனிமொழி படித்தால்தான் அந்த நூலிலிருக்கிற பொருளைத் தெரிந்து கொள்ளலாம். நடுக்காலத்து ஆங்கிலத்திலே 'மிடில் இங்கிலிசு' நூற்களிலே சில இருக்கின்றன என்று சொல்லுவார்கள். அவற்றைப் படித்தாலும் தெரிந்து கொள்ள முடியாது. 'பிரியேவுல்ப்' படிக்கிற அறிவு இந்தநூலைப் படிக்கப் போதாது. இதற்கொரு தனிமொழி வேண்டும். ஆங்கிலம் என்று பெயரே தவிர இவை தனித்தனி மொழிகள் தாம். 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சாசர் ஆங்கில நூலைப் படிப்பதற்கும் தனியாக ஒரு மொழி படிக்கவேண்டும். அதற்குப் பிறகு ஏறத்தாழ ஒரு வழியாக நிலை (Standard) ஆனதாலே தெரிந்து கொள்ள முடிகிறது இப்போது. அப்படி நாளுக்கு நாள் புதுப் புதுச் சொற்களை ஏற்றுக் கொண்டேபோய் கழித்துக் கொண்டே வருவோமானால் நம்முடைய கருத்துகள்—இன்றைக்கும் பேசுகின்ற கருத்துகள்—இன்றைக்கு நாம் எழுதியிருக்கின்ற கருத்துகள் 50 அல்லது 100 ஆண்டுகட்குப் பின்னே பயன்படா. 2000 ஆண்டுக்கு முன்னே எழுதிவைத்த குறள் இன்று பயன்படுகின்றது. அதற்கு முன்னே எழுதி வைத்த தொல்காப்பியம் முதலிய மற்ற நூல்களெல்லாம் இன்றைக்குப் பயன்படுகின்றன. ஏதோ இலைமறை காய்போல—சிறிது சிக்கலாக இருப்பதுபோல் தோன்றினாலும் கூட இலையைத் தள்ளிப் பார்த்தால் காய் தெரிகின்றது.

தமிழ் வளர்வதற்கு ஒரு வழி இருக்கிறது. அந்த வழியிலே அது வளர்ந்தால் குறையில்லை. பிற மொழியினுடைய அடிப்படையை வைத்துக்கொண்டு—வேரை வைத்துக் கொண்டு தமிழில் சொல்லை உண்டாக்கலாம். இப்போது 'அண்டர் கிரவுண்டு' என்பதற்கு புதுச் சாக்கடை என்று சொல்லலாம். அது புதுச்

சொல்தான். புதுத்தொடர் தான். ஆனால் அத்தச் சொல்லுக்கு ஏற்ற சொற்களைச் சொல்லத் தெரியும். அது போன்றே 'Institution' என்பதற்கு நிறுவனம் என்று சொல்லலாம். இந்த வகையிலே சொல்லை உண்டாக்கிக் கொள்ளலாம். ''நிறுவனம்'' பழைய ஆட்சியிலே இல்லாவிட்டாலும்கூட அதை உண்டாக்கிக் கொள்ளலாம். இன்னொரு பெரிய குறை என்னவென்றால் இந்தச் சொல்லை ஆக்கும்போது நாட்டுப் புறத்திலே உள்ள மக்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் புலவர்கள் தடை செய்வார்கள். இதற்குப் பழைய ஆட்சி இல்லை என்றெல்லாம் சொல்லுகின்றார்கள். எல்லாத் தமிழ் நூல்களும் நமக்குக் கிடைக்காதபோது இந்தச்சொல்லுக்கு நூலாட்சி இருக்கிறதா என்றெல்லாம் கேட்பது சரியன்று.

நமக்கு வான நூல் இருந்திருக்கின்றது. ஞாலம் என்ற ஒரு சொல் இருக்கின்றது. தொங்கிக் கொண்டிருப்பது என்ற பொருளிலே இந்த நிலவுருண்டைக்கு ஞாலம் என்று பெயர். இது வானத்திலே ஓர் உருண்டையாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியைத் தமிழன் அறிந்திராவிட்டால் எப்படி இந்த ஞாலம் என்ற சொல்லை அவன் பயன்படுத்தியிருப்பான்! அதை அறிய வேண்டுமானால் எத்தனையோ செயல்களை அறிந்திருக்க வேண்டும் நடுவிலே ஞாயிறு இருந்து இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருக்கலாம். அந்த ஞாயிறு நடுவிலே இருந்து கோள்களை எல்லாம் பிடித்துக்கொண்டிருக்கிறது கோள் என்ற சொல் கொள்கிறது என்ற பொருளிலே இருக்கின்றது. இந்தச் சொற்களெல்லாம் எப்படித் தமிழிலே வந்தன? இந்தக் கலைகள் இருந்திருக்க வேண்டும்.

''கிளாத் மார்ட்'' என்பதைத் துணிக்கடையென்று சொல்லலாம். துணி அங்காடி என்றும் சொல்லலாம். கிளாத் மார்ட் என்று போடவேண்டிய தேவை இல்லை. அப்படியே ஆங்கிலத்தில் எழுதட்டும். ஆங்கிலத்தில் எழுதும்போதும் C-L-O-T-H M-A-R-T என்று போட வேண்டியதுதான். தமிழிலே கி-ளா-த் மா-ர்-ட் என்று எழுதினால் அது அருவருப்பாக இருக்கின்றது. தமிழில் இப்போது மாநாடு நடந்துகொண்டிருக்கின்றது என்று சொல்லுகிறோம். இதை ஆங்கிலத்திலே சொல்லவேண்டுமானால் The Conference is going on என்று சொல்ல வேண்டும் அல்லவா? அதை விட்டு விட்டு மாநாடு... நடந்து.. கொண்டு... இருக்கிறது என்று ஆங்கில எழுத்திலே எழுதிவிட்டால் ஆங்கில மாகி விடுமா? ஆகாது. அதுபோலவே ஆங்கிலத்தைத் தமிழ் எழுத்திலே எழுதிவிட்டால் அது தமிழாகி விடாது என்பதைப் பற்றிக் கொஞ்சங்கூட உணர்ச்சி இல்லாமல் இருக்கிறோம். பொதுவான மாந்தன் 'பஸ்' என்ற சொல்லை எப்படித் தெரிந்து? கொண்டான் ஆங்கிலம் படித்தவர்கள் சொன்னார்கள்

அது பஸ் என்று; இல்லாவிடின் அவனுக்கு எப்படித் தெரியும்? பாவம் அரிசிக் கட்டுப்பாடு என்பதை அரிசிக் 'கண்ரோல்' என்று எழுதுகிருன். அறிவு கெட்டுப்போன நிலையிலே நாம் இருந்துகொண்டிருக்கிரேும். எழுதினவன் முதலிலேயே கட்டுப் பாடு என்று எழுதி இருக்கலாம். பங்கீடு வந்தது (Rationing) அப்போதும் அதை 'ரேஷனிங்' என்று எழுதிவிட்டான். உடனே நாட்டுப் புறத்திலே இருக்கிறவன் அந்தச் சொல்லேயும் பிடித்துக்கொண்டான். பின்னுல் 'பங்கீடு என்று எழுதுங்க ஐயா' என்று சொன்னுல் அது யாருக்கு விளங்குகின்றது? 'ரேஷனிங்' என்பதுதான் எல்லாருக்கும் தெரிகிறது என்கிருன். இன்று நாட்டுப் புறத்திலே போய்க் கேளுங்கள் "ரேஷன்" என்று சொல்லுகிருன். 'ரேஷன் கடைக்குப் போனேன்' என்று சொல் லுகிருன். அதனுலே 'ரேஷனிங்' தெரியும் என்கிருன். இது படித்தவன் செய்யும் குறும்புத் தனமல்லவா?

இவற்றை எல்லாம் கருதித்தான் அரசினர் அலுவல்களிலும் மற்ற இடங்களிலும் எழுதப்பட்டிருக்கும் சொற்கள் திருத்தமான சொற்களாக இருக்கவேண்டும் என்று கூறுகிறேன். இவற்றை எல்லாம் உள்ளத்தில் வைத்துத்தான் நேற்று இங்கு 3 மணியி லிருந்து $4\frac{1}{2}$ மணி வரைக்கும் குழு ஆய்வு செய்தது. அந்தக் குழு ஆய்வு செய்து சில பரிந்துரைகளை (Recommendations) மாநாட்டினுடைய முடிவுக்கு வைத்திருக்கிறது. இதை மாநாடு ஏற்றுக் கொள்ளுமேயானுல் மேலே யார் யாருக்குத் தெரிவிக்க வேண்டுமோ, எப்படிச் செயல்படுத்த வேண்டுமோ அப்படிச் செயல்படுத்தலாம். இப்போது நான்கூற விரும்புவது யாதெனில் சென்னே மாகாணத்திலே தமிழை ஆட்சி மொழியாக்கி-ஆக்குவ தற்குத் திட்டமிடுகின்ற அரசினருக்கு நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுவதாம். இனி அப்படி அவர்கள் ஆட்சி மொழி ஆக்கியிருப்பதை வெற்றியோடு நடத்துவதற்கு நமக்கு ஒரு பெரும் பங்கு இருப்பதாலே-நாம் தமிழிலே வல்ல வர்களானதாலே தமிழாசிரியர்கள் இதிலே எந்தெந்த வகையில் ஈடுபட வேண்டுமோ அப்படியெல்லாம் ஈடுபட வேண்டும். அவர்கள் ஈடுபட அரசினரும் அவர்களுக்குத் தக்க வாய்ப்பளிக்க வேண்டும் நம்முடைய ஒத்துழைப்பை அரசினருக்கு நாம் தெரிவித்துக் கொள்ளுகிரேும். (தொடரும்.)

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந் துள்ளன சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகிருற னர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ்செய்து அனுப்ப வேண்டுகிரேும்.

இலக்கணவியல்.

ஒடு--உருபு.

வித்துவான். மோ. இசரயேல் எம். ஏ.,
(தமிழ் ஆய்வுத் துறை–சென்னைப் பல்கலைக் கழகம்.)

மூன்றும் வேற்றுமையின் உருபு ஒடு என்று கூறினர் தொல் காப்பியனர் (எழு. 113; சொல் 64, 73) அவர் காலத்தில் இவ் வுருபாலேயே மூன்றும் வேற்றுமைக்குப் பெயர் வழங்கிற்று என் பதும் இவ்வுருபு வினைமுதல், கருவி ஆகிய பொருட்களில் வழங் கிற்று என்பதும்

''மூன்றுகுவதே,

ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதற் கருவி அனைமுதற் றதுவே'' (சொல் 73)

என்னும் நூற்பாவால் அறிதும்.

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த நச்சினர்க்கினியர் உடனிகழ்ச்சிப் பொருளும் வினைமுதலில் அடங்கி இருக்கு மாற்றை எடுத்துக் காட்டுகள் மூலம் விளக்குகின்றர். நன்னூ லார் மூன்றும் வேற்றுமை கருவி, கருத்தா (வினைமுதல்) உட னிகழ்வு ஆகிய மூன்று பொருட்களில் வழங்கும் என்றர் (நன். 297). இம்மூன்று பொருட்களிலும் 'ஒடு' என்னும் உருபு தொல்காப்பியர் காலத்தில் வழங்கிற்று. தொல்காப்பியர் 'ஒடு' உருபுக்குச் சிறப்பு அளித்திருப்பினும், உடனிகழ்ச்சிப் பொரு ளுக்குச் சிறப்பு அளித்திலர் என்பது தெளிவு.

தொல்காப்பியர் 'ஒடு' உருபு உயர் பொருள் உணர்த்திய பெயரோடு இணைந்து வரும் 'என ஒரு வினை யொடுச்சொல் உயர் பின் வழித்தே' (சொல் 191) என்னும் நூற்பாவில் கூறிஉள்ளார்.

எ–டு. மனைவியொடு மக்களும் நிரம்பினர். தெய்வச் சிலை யார் 'ஒடு' உருபின் பின்னர் உயர்பொருட் பெயர் வரும் என மாருன விளக்கம் தருகின்றனர். இவ்விளக்கம் பொருத்தமாகத் தோன்றவில்லை.

தொல்காப்பியர் 'ஆன்' என்பதையும் மூன்றும் வேற்றுமைப் பொருளில் வரும் இடைச் சொல்லாகக் கூறி இருப்பினும், அது 'ஒடு' உருபுக்கு நிகரான சிறப்புப்பெற்று அக்காலத்தில் விளங்க வில்லை எனலாம். அதை அவர் உருபு என்று எவ்விடத்திலும் கூறிற்றிலர். உய்த்துத் தான் உணரவேண்டி உள்ளது. ஒடு

உருபு மூன்றும் வேற்றுமையின் எல்லாப் பொருட்களிலும் அக் காலத்தில் வழங்கியது. "கொடியொடு துவக்குண்டான்", "ஊசியொடு குயின்ற பட்டும் தூசும்" என்னும் எடுத்துக் காட்டுகள் அது கருவிப் பொருளிலும் வழங்கிற்று என்பதைத்தெளிவு படுத்துகின்றன.

நாளடைவில் 'ஒடு' வினைமுதல் கருவி ஆகிய பொருட்களில் வழக்குக் குறைந்து, உடனிகழ்ச்சிப் பொருளில் மட்டும் வழக்குப் பெற்றுவிட்டது. ஒடு, ஆன் ஆகியவை இரண்டும் ஒரே பொருளுடையவை என்று கூறிய சேனாவரையரே அவர் காலத்தில் ஒடுவெனும் உருபு வினைமுதல் கருவிக்கண் அருகியல்லது வராது (சேனாவரையர். சொல். உரை பக். 58)என்றார். தொல்காப்பியர் காலத்தில் உருபு என்று பெயர் பெறாத 'ஆன்' வினைமுதல் கருவி ஆகிய பொருட்களில் பெரு வழக்குப் பெற்று விட்டது.

மூன்றுகு வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள் (நன். 297)

என்னும் நூற்பாவில் நன்னூலார் ஆல், ஆன், ஓடு, ஒடு என்னும் நான்கு உருபுகளைக் குறிப்பிட்டு, அவை கருவி, கருத்தா (வினைமுதல்), உடனிகழ்வு ஆகிய மூன்று பொருட்களில் வரும் என்கிறார். நன்னூல் உரையாசிரியர்கள் ஆன் > ஆல் கருவி கருத்தா (வினை முதல்) ஆகிய பொருட்களிலும், ஒடு > ஓடு உடனிகழ்ச்சிப் பொருளிலும் வழங்கும் என வரையறுத்துக் கூறி விட்டனர் அவர்கள் இவை சிறுபான்மை மாறி வழங்குதலும் உண்டு என்பதையும் ஒப்புகின்றனர்.

நன்னூலார் காலத்திலேயே இவ்வுருபுகளுக்குள் முரண் (Contrast) ஏற்பட்டுவிட்டது எனக் கருத இடம் உண்டு. சேனாவரையர் இத்தகைய பொருள் வேறுபாடு தோன்றும் என்பதை எதிர்பார்த்து, ஒடு, ஆன் ஆகியவை இரண்டும் எல்லாப் பொருட்களிலும் வழங்கும் எனவும், வடமொழியிலும் ஒரே பொருள் உள்ள பல உருபுகளை ஒரு வேற்றுமைக்குரியனவாகக் குறித்தல் வழக்கு எனவும் கூறி, அவ்வுருபுகள் இரண்டு வேற்றுமைக்கு உரியன ஆகா என்பதற்கு விளக்கம் தருகிறார். தொல்காப்பியர் காலத்தில் ஒரே பொருளில் வழங்கிய 'ஒடுஆன்' என்னும் உருபுகள் பொருள் வேறுபாட்டில் வளர்ச்சிபெற்று, இன்று ஒடு > ஓடு : ஆன் > ஆல் :: உடனிகழ்வு : வினைமுதல் + கருவி என்ற அளவில் தனிநிலை பெற்றுவிட்டன. மொழியியலார் (Linguists) கருத்துப்படி மூன்றும் வேற்றுமை இன்று இரண்டு வேற்றுமையாகக் கொள்ளும் தகுதி பெற்றுள்ளது. ஏனெனில் அதன் உருபுகள் பொருளில் மாறுபடுகின்றன (Contrast in meaning) கால்டுவெல் ஐயர் அவர்களும் இதனைக் கருவி

(Instrumental) உடனிகழ்வு (sociative) என இரண்டு வேற்றுமைகளாகக் கொள்ளுதல் தக்கது என்றார்.

(திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பக். 277)

இன்று மூன்றாம் வேற்றுமை உருபு 'ஓடு' சிறப்புப் பொருட் பேற்றை அடைந்து விட்டது. தொல்காப்பியர் காலத்தில் வினை முதல், கருவி, உடனிகழ்வு ஆகிய எல்லாவற்றிலும் வழங்கி வந்த 'ஒடு' இன்று உடனிகழ்வுக்கு மட்டும் உரியதாகிவிட்டது. அஃது உரு மாற்றத்தையும் (ஒடு > ஓடு) அடைந்துவிட்டது. முன்னுயிர் நீண்டு முயற்சி எளிமை நல்கி நிற்கின்றது. மூன்றாம் வேற்றுமை உருபு 'ஒடு' தன் எல்லையைக் குறைத்துக் கொண்டு பொருள் மாற்றத்தையும் (restriction-semantic change) உரு மாற்றத்தையும் (formal change ஒடு > ஓடு) அடைந்து இருப்பது, தந்தை தனயனுக்குத் தனி உரிமை வழங்கித்தன் உரிமைகளைக் குறைத்துக் கொண்டு பழைய நிலைமையிலும் மாற்றம் அடைந்து வாழ்வதனை ஒக்கும்.

இன்றைய பேச்சு வழக்கில் காணப்படுவது 'ஓடு' உருபே. அதுவும் உடனிகழ்ச்சிப் பொருளில் மட்டுமே வழங்குகின்றது.

தமிழில் சொற்களா இல்லை? குறை கூறுவார் பார்வைக்கு.

இடப் பெயர்.

இடம் — அறுவகைப் பொருளில் ஒன்றான இடம்.
தாவு — ஒரு கூட்டத்தில் ஒருவன் இருக்குமிடம்.
இருக்கை — இருக்கும் "ஆசனம்"
வைப்பு — வைத்திருக்கும் நிலம்
வரைப்பு — எல்லையோடு சேர்ந்த இடம்.
நிலை — நிற்குமிடம். நிலையம் — நிற்கும் பெரிய இடம்.
நிலைக்களம் — அடிப்படையான இடம்.
வயின் — குறிப்பிட்ட சிற்றிடம்.
அகம் — உள்ளிடம். புறம் — வெளியிடம்.
இடை — பல பொருள்களுக்கு இடையிலுள்ள இடம். (Between)
நடு — பல பொருள்களுக்குச் சரி நடுவிலுள்ள இடம் (Centre)
அகடு — ஒரே பொருளின் உள் நடுவிடம்.
தலை — மேலிடம். கண் — மேற் பரப்பிடம்.
சூழல் — சூழ்ந்திருக்குமிடம்.
புடை — சூழலில் ஒரு திசைப் பகுதி.
மருங்கு — ஒட்டியுள்ள ஒரு புறம்.
ஞாலம் — நிலமாகிய கோள்
நிலம் — தரை. மண் — நிலப் புழுதி.
மாநிலம் — முழுத்தரை, நானிலம் - நால்வகை நிலத்தொகுதி
உலகம் — ஞாலத்திலுள்ள உயிர்த் தொகுதி. — ஞா. தே.

இலக்கிய ஆய்வு:

வஞ்சிக் காண்டத்தின் இன்றியமையாமை.

- தே. லூர்து. எம். ஏ. -
(தமிழ்த்துறை, சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை)

நறுமலர்க் கோதையாம் கயமலர்க் கண்ணி கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றை மூன்று காண்டங்களாக அமைத்துச் சேரர்குலச் செம்மல் சிலம்பை இசைத்திருக்கிறார். முடிகெழு வேந்தர் மூவருக்கும்உரிய சிலம்பில், கற்பின் செல்வி கண்ணகியின் வரலாறு புகார், மதுரைக் காண்டங்களிலேயே முடிந்து விடுகின்றது. இந்நிலையில் வஞ்சிக் காண்டம் என்ற ஒன்று வேண்டியதுதானா? அக்காண்டமிருப்பதால் என்ன நிறைகள் உண்டு? அக்காண்டமின்றேல் என்ன குறைகள் ஏற்படும்? என்றெல்லாம் வினாக்கள் தோன்றற்கு இடனுண்டு.

அறநெஞ்சம் மிக்க அடிகளார் முத்திறக் கொள்கைகளைச் சிலம்பில் யாண்டும் வலியுறுத்திச் செல்லுவர். புகார், மதுரைக் காண்டங்களிலேயே அடிகளாரின் முத்திறக் கொள்கைகள் நிறைவெய்துகின்றன. யாங்ஙனம் எனின், அரைசியல் பிழைத்த தீதுதீர் மதுரைத் தென்னவனுக்கு அறங்கூற்றாயதையும், ஊழ்வினை உருத்து வந்தூட்டிக் கோவலன் மாமலர் நெடுங்கண் மாதவியைப் பிரிந்து, மதுரையில் பட்டதையும் பலவாறு சுட்டுவர். ''உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்'' என்ற கொள்கையையும் முதலிரு காண்டங்களாலேயே தெளிவிப்பர். கணவனோடிருந்த மணமலி கூந்தலாளை நற்குடிப்பிறந்த நங்கையாம் முழங்குவாய்ச் சாலினி,

''இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்ப''

என்றுஏத்துவள். இத்துடன் அடிகள் நிறுத்தினாரல்லர். உறுதவத்தளாய கவுந்தியடிகள்

''தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத் தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்''

என்று பாடிப் பரவுகிருர். கழிபெருஞ் சிறப்புடைய கவுந்தியடிகள், ஒருமூன்றவித்தோனுகிய அருகர் அறவனைத் தவிர, வேறு தெய்வத்தை வணங்கி அறியாதார். இத்தகைய மாதவத்தாட்டியாம் தெய்வம் தொழும் கவுந்தி வாயால் தெய்வம் தொழாக் கண்ணகியைத் தெய்வமாகத் தொழச் செய்கிருர். இல்லறச் செல்வியைத் துறவியால் போற்றச் செய்கிருர். அதுவொன்றே:

''பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்ெனுடு
வான வூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழற் கண்ணகி தானென்''

இவ்வாறு மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி விண்ணகம் சென்று வானேரும் தொழும் வான்புகழ் கொண்டாலும் வஞ்சிக் காண்டத்துத்தான் உலகச் சிறப்புப் பெறுகின்ருள்.

கற்புக்கடம் பூண்ட கண்ணகி தென்னகத்தின் திருவிளக்கானுள். குன்றக் குறவர்கள் கருந்தடங் கண்ணி கண்ணகி விட்புலம் போயதைத் தம் கட்புலனுல் கண்டனர்.

''இவள்போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம்
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே [இல்லையாதலின்
தெய்வம் கொள்ளுமின் சிறுகுடி யீரே''

என்று கூறித் தெய்வமாக்கினர். அவள் சோணுட்டில் அரும்பித் தென்றல் தமிழ் விளையாடும் மதுரையிலே மலர்ந்து செந்தமிழ்ச் சேர நாட்டில் அரசியற் செல்வுாக்குப் பெற்ருள். உலகோரும் வடவரும் அவள்தன் புகழை அறியச் செய்தான் செங்குட்டுவச் செம்மல். கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும் சாலியொருமீன் தகையாளுக்கு விழாவயர்ந்தான். கயமலர்க்கண்ணி கண்ணகி சேர நாட்டில் சிறப்புருது சோணுட்டிலோ, பாண்டி நாட்டிலோ சிறப்பெய்திருள் என்று மட்டும் அடிகள் எழுதியிருப்பரேல் காப்பியம் சிறப்புற்றிருக்காது. மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தாளுக்கு அந்நாட்டினரே சிறப்புச் செய்தனர் என்றெழுதியிருப்பின் அஃது உயர் சிறப்பாகாது. கணவனுயிர் குடித்த பாண்டி நாட்டில் சிறப்பெய்திருள் என்ருலும் சிறப்பன்று. ஆகவே போதிலார் திருவினுளாம் பூம்புகார்ச் செல்வி சேர நாட்டில் செங்குட்டுவனுல் முதன் முதலாக அரசியற் செல்வாக் கெய்தினள் என்று அடிகள் வஞ்சிக் காண்டத்துப் படைத்திருப் பது தள்ளத்தகாச் சிறப்புடையது.

பல்சுவையும் நிறைந்து மிளிர்வது முத்தமிழ்க் காப்பியம். தமிழ் முதனூலாசிரியன் தொல்காப்பியன் வகுத்த எண்சுவை

களும் சிலம்பில் காணப்பட்டாலும், அடிகள் இன்பச்சுவைக்கும் அழுகைச் சுவைக்கும், பெருமிதச் சுவைக்குமே முதலிடம் அளித்துள்ளார். புகார்க் காண்டத்தில் இன்பச் சுவையையும், மதுரைக் காண்டத்தில் அவலச் சுவையையும் மிகுத்துக் கூறிய தோடு அடிகள் நிறுத்தியிருப்பின் காப்பியம் துன்பியலாக முடிந் திருக்கும் அவ்வாறன்றி அங்கண் உலகின் அருந்ததி அன்னா ளுக்கு விழாவயர்ந்து தெய்வமாக்கினான் செங்குட்டுவன் என்று வஞ்சிக்காண்டம் கூறுவதான் காப்பியம் இன்பியலாக முடிகின் றது என்பது வெள்ளிடைமலை.

காப்பியத்துள் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் வருவது இயற்கை. உலகப் புலவர் அனைவரும் மொழியால் வேறுபட்டி ருப்பினும் அவர்தம் கருத்தால் ஒன்றுவர். அவரெல்லாம் தம் காப்பியத்து ஓரளவு இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைப் படைத்தி ருப்பதைக் காணலாம். புலவன் இருப்பதைத் திருத்துவான், இல்லாததைப் புகுத்துவான். இளங்கோவடிகளும் சிலம்பில் இவ்வாறு படைப்பர். கண்ணகி வானகம் எய்தினள் என்பது உலகியலில் நம்புதற்கியலாச் செய்தி. இந் நம்புதற்கியலாச் செய்தியைக் குன்றக் குறவர்கள் செங்குட்டுவனிடம் "எம்கட் புலம் காண விட்புலம் போயது" வியப்பிற்குரியது என்று சொல் லியதாக நம்பச் செய்கின்றார். இதுவும் வஞ்சிக் காண்டத்தாற் பெறப்படுகின்றது. புலவன் மெய் நிகழ்வுகளோடு தன் செய் நிகழ்வுகளையும் படைக்கின்றான். இதனால் கதை, நிகழ்ந்த வர லாறு என்று துணிய ஏதுவாதல் காணலாம்.

தம் தமையன் செங்குட்டுவனைச் சிறப்பிக்க இளங்கோப் புலவர் வஞ்சிக் காண்டம் எழுதினார் என்று சிலர் கூறுப. அற நெறி பிறழா அடிகளாகிய இளங்கோ தம் தமையனை மட்டும் சிறப்பிக்க வஞ்சிக் காண்டம் யாத்திருப்பாரல்லர். தம் தமைய னைப்புகழ அவர் விரும்பியிருப்பின் செங்குட்டுவனின் வடநாட்டு வென்றியைத் தனித்ததோர் இலக்கியமாகப் படைத்திருப்பர்; வஞ்சிக் காண்டத்தான் புலப்படுத்தி இருப்பாரல்லர். மன்னனைச் சிலம்பின் வென்ற சேயிழை வஞ்சிநாட்டகத்து வந்து தங்கி யிருந்தகாலை வானுலகெய்தினள். ஆதலின் அவ்வளவிற்கே செங்குட்டுவன் சிறப்புச் செய்யக் கடமைப் பட்டுள்ளான். "நம் அகநாடடைந்த பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என் பதே சேரன் தேவி இருங்கோ வேண்மாளின் காரணம். பூம் புகார்ப் பூங்கொடி நங்கையைச் சிறப்பித்து நல்விழா எடுத்தான் குடக்கோச் சேரனாதலின் அதன் வாயிலாக அண்ணனைச் சிறப் பித்தார். செங்குட்டுவனை முழுவதும் சிறப்பிக்கக்கூடாது என் பதற்காகவே போலும் சோழ பாண்டியரால் அவனை இகழச் செய்கிறார். முனி உருவில் உயிர் பிழைத்தோடிய மன்னர்களை வென்றது ஒரு வென்றியா? என்று சோழனும், தவக்கோலம்

கொண்டவரைச் சினந்த சினப்பு ஒரு சினப்பா? என்று பாண்டியனும் இகழுகின்றனர். ஆதலின் தலைவனைப் புகழ வஞ்சிக் காண்டம் யாத்தாரல்லர் என்பது தெளிவு கண்ணகிக்குக் கல்லெடுத்ததற்காகவே சிறப்பித்தார்.

மூன்று காண்டங்களையும் கூறினால் அவர் தம் தமிழகப் பற்றுப் புலப்படுகின்றது. முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது தமிழகம். ஆகவேதான் தம் தலைவன் தமிழக மானம் காத்த பண்பை வஞ்சிக் காண்டத்து வைத்தார். வடவரசர்கள் தமிழகத்தைப் பழித்தார்களாம். அதற்கு எதிர்ப்பின்றேல் எம்போலும் முடிமன்னர் இருந்தென்ன இறந்தென்ன என்ற கருத்துடன் சீறிச் சினந்து படையெடுத்து வென்று தமிழகத்தின் பெருமையை வடவாரிய மன்னர்க்குணர்த்தினன். காவா நாவிற் கனக விசயர் தம் கதிர்முடி மிசைக் கல்லேற்றிக் கொணர்ந்து கழுவாய் தேடினன். ஆனால் தமிழக வேந்தர் இருவர் தன்னை இகழ்ந்தபோது சினம் கொண்டாலும் தணிந்தான்.

வஞ்சிக்காண்டத்துத்தான் வஞ்சமற்ற நெஞ்சினன் பாண்டியன் என்றும், தீதுதீர் மதுரைத் தென்னவன் என்றும் அடிகளார் சான்றுகாட்டி நிறுவுவர். குற்றமற்ற கோவலனை, சோணாட்டு வணிகனைக் கொன்றதால் பாண்டியர் குடிக்கு நீங்காப்பழி வந்து விடுமோ என்று அடிகள் அஞ்சுகிறார். ஆகவே பிற நாட்டு வேந்தனால் பாண்டியன் நெடுஞ்செழியன் குற்றமற்றவன் என்று மாசு துடைக்கின்றார்.

> ' தென்னர் கோமான் தீத்திறம் கேட்ட
> மன்னர் கோமான் வருந்தினன் உரைப்போன்
> எம்மோ ரன்ன வேந்தர்க்கு உற்ற
> செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
> உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென
> வல்வினை வளைத்த கோலை மன்னவன்
> செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது''

சேரனால் மட்டும் புகழச் செய்து நிறுத்தினாரல்லர். தென்னர் கோமானால் கணவனை இழந்து கடுந்துயர் உழந்து வாடி விண்ணகம் புக்க கற்புத் தெய்வத்தின் திருவாயாலேயே பாண்டிப் பெருவேந்தன் குற்றமற்றவன் என்று சுட்டுகின்றார்.

> ''தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
> நல்விருந் தாயினன் நானவன் தன்மகள்''

என்று கண்ணகி கூறுகின்றாள். வஞ்சிவாழ் பெருமக்களும் பாண்டியன் தீதற்றவன் என்பதைப் புலப்படுத்துகின்றனர்.

''செங்கோல் வளைய உயிர்வாழார் பாண்டியரென்று
எங்கோ முறைநா இயம்பாவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்''

''தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணின்நீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனல்நீர் வையை
சூழு மதுரையாற் கோமான்தன் தொல்குலமே''

இவ்வாறு வஞ்சிக்காண்டத்துத்தான் பாண்டியனின் வசையை முழுவதும் துடைத்து இசையாக்குகின்றார்.

வஞ்சிக் காண்டத்தான் புகார் மதுரைக்காண்டச் செய்திகள் பலவற்றிற்கு விடையிறுக்கின்றார். கானற்பாணி கனக விசயர்தம் முடித்தலை நெறித்ததைச் சுட்டுகின்றார். இன்னும் மதுரைக் காண்டத்தோடு மட்டும் நிறுத்தியிருப்பின் கவுந்தி, கோவலன் கண்ணகியரின் தாய், தந்தையர், மாதரி, மாதவி மணிமேகலை முதலியோரின் முடிவு என்ன என்று கூறாமல் ஆசிரியர் குறை செய்தனர் என்று முடியும். கதைப் பாண்டர் (பாத்திரங்கள்) தம் பண்புகளும் நிறைவெய்தியிருக்க முடியாது.

''என்னே டிவர்வினை உருத்த தோவென
உண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்த்ததும்''

என்று பற்றறுக்க முயன்ற கவுந்தியடிகள் கோவலன் கண்ணகியர்பாற் கொண்ட மீதூர்ந்த அன்பிற்கு அடிமையாகி உயிர் விட்டதையும் சுட்டுவர்.

''அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ தோழீ
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழீ''

என்று தேவந்தி வாயிலாகத் தாயர்தம் முடிவைக் கூறுகிறார்.

''கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
மாசாத்து வான்துறவும் கேட்டாயோ அன்னை
மாநாய்கன் தன்துறவும் கேட்டாயோ அன்னை''

என்று மாசாத்துவானும் மாநாய்கனும் துறவு பூண்டு தொண்டு செய்ததைக் காவற்பெண்டின் வாயிலாக அவலச்சுவை பெருகப் பாடுகிறார்.

''காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையும் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவும் கேட்டாயோ தோழீ''.

மாமலர் நெடுங்கண் மாதவி கணிகையர் குலத்துப் பெண். கோவலனைக் கணவனாகவே போற்றி யொழுகியவள். குலப் பிறப்பாட்டியொடு இரவிடைக் கழிந்ததற்காக வருந்தி மன்னிப் புக் கேட்டவள். யாதொரு பிழையும் செய்யாதவள். மேதகு சிறப்புடைய மாதவி தன்மகளையும் துறவறப் படுத்தித் தானும் துறவுபூண்டாள். கள்ளி வயிற்றில் அகில் பிறப்பது போலக் கணிகையர் குலத்துள்ளும் உயர்ந்தோர் பிறப்பர் என்பதை அடிகள் படைக்கின்றார். வஞ்சிக்காண்டத்துத்தான் மாதவியின் பண்புநலன்கள் முழுமை எய்துகின்றன. அன்புச் செல்வியை அறச்செல்வியாக்குகின்றார் புலவர்.

''ஐயந்தீர் காட்சி அடைக்கலம் காத்தோம்ப
வல்லாதேன் பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
அவ்வை மகளிவள்தான் அம்மணம் பட்டிலா
வையெயிற் றையைக் கண்டாயோ தோழீ
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ''

என்று அடைக்கலப் பொருளைக் காக்க முடியாத மாதரி உயிர் துறப்பதைக்காட்டுகின்றார். எல்லாக் கதைப்பாண்டரும் வஞ்சிக் காண்டத்துத்தான் நிறைவெய்துகின்றனர்.

இளங்கோவடிகள் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். அவர்தம் வரலாறு வஞ்சிக் காண்டத்தின் இறுதியில் கண்ணகியின் வாயிலாக வெளிப்படுகின்றது. சிலம்பை யாத்த சீர்சால் புலவர் இளங்கோவடிகளே, அவர் செங்குட்டுவனின் தம்பியேஎன்பவைஉறுதிப்படுகின்றன. வஞ்சிக்காண்டம் இல்லை யென்றால் இளங்கோவடிகள் செங்குட்டுவனின் தம்பி இல்லை என்று சொல்லி வெறும் வாயை மெல்லுகின்ற சில பெரியவர் களுக்கு ஒரு பிடி அவல் கிடைத்தது போலாகி இருக்கும்.

வேந்தர் மூவரையும் ஒப்பப் புகழ்ந்து எழுதியுள்ளார் இளங்கோ. வஞ்சிக்காண்டம் இன்றேல் காப்பியம் முழுமை பெற்றிருக்காது. ''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் தமிழ் வரம்பறுத்த தண்புனல்'' நன்னாட்டில் ஒரு பகுதி விட்டுப் போயிருக்கும். தமிழகம் முழுவதையும் பற்றிக் கூற வில்லை என்ற குறைபாடு ஏற்படும். ஆசிரியன் சேரநாடு பற்றி எழுதி, அது நம் கைக்குக் கிட்டாது, செல்லின் வாயிலோ அன்றி நீரிடையோ பட்டொழிந்து போயிற்று என்று ஐயுறு தற்கு இடனேற்பட்டிருக்கும். வஞ்சிக்காண்டம் இன்றேல் தமிழகத்தின் வரலாறே சுவடு தெரியாது மண்ணோடு மண்ணாய் மடிந்திருக்கும்.

(61-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகும். இந் நம்பிக்கை உலகை முன்னேற்றும். தன்னம்பிக்கையே பெருந் துணை.

சமயம் அளவிலா வன்மை தருவது. வன்மையே நன்மை. மெலிவே கரிசு. எல்லாத் தீங்குகளையும் கரிசுகளையும் ஒரே சொல்லில் அடக்கிவிடலாம்; அதுவே வலிவின்மை. இம் மெலிவே தீமைக்கும், தன்னலத்துக்கும் காரணமாகின்றது. நாம் வன்மை பெறுவோம். அன்னையின் பாலிலிருந்தே அவ்வன்மையைப் பெறுவோம்.

உண்மையைச் சொல்ல அஞ்சாதீர். அனைத்து உள்ளங்களின் இயல்பும் உண்மையே. உண்மைக்கடையாளம் இதுவே. உடலாலோ உளத்தாலோ, உயிராலோ உங்களை மெலிவுறச் செய்வது எதுவோ அதை நஞ்செனவிலக்குங்கள். அதில் உயிர் இல்லை. அஃது உண்மையுமன்று; உண்மை வலிவூட்டுவது. உண்மையே தூய்மை; உண்மையே அறிவு. அதை நாடுவதே கல்வி.

உடல் வலிவின்மையும் நம் துன்பங்கட்கெல்லாம் காரணமாகும். நாம் சோம்பியிருக்கின்றோம். ஒன்று கூடி முயல்வதில்லை. ஆயிரம் பேசுகின்றோம்; ஒன்றுமே செய்வதில்லை; இது நம் வழக்கமாகப் போயிற்று. உள்ள மெலிவுதான் காரணம். மெலிந்த மூளை எதனையுஞ் செய்யாது. அதற்கு வலிவூட்ட வேண்டும் முதலில் நம் இளைஞர் எல்லாம் உள்ள வலிவு பெற வேண்டும். சமயம் பின்னால் வரட்டும். (தொடரும்.)

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

கையொப்பம்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு
தனியிதழ்.	50 காசு.	60 காசு.	75 காசு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு உருபா 1—00 முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்கவும்.

தென்மொழி பதிவு எண்: எம். 7211

பொருளடக்கம்

சுவடி-1 ஓலை-9

ஐப்பசி-தி. பி. 1994.

தலைமை (ஏ)மாற்றம்		3
சமற்கிருதவாக்கம்-சொற்கள்	(பாவாணர்)	7
எண்சுவை எண்பது	(இலக்கியம்)	19
அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை		24
பாண்டியன்......நெடுஞ்செழியன்		30
ஏறென நீ எழுவாய்	(பாடல்)	38
சப்பானியரின் வியத்தகு பழக்கங்கள்		39
கல்லூரிப் பயிற்று மொழி		44
சாதலெம் கடனே	(பாடல்)	46
உயர்வின் இலக்கணம்		47
பண்டைத் தமிழர் ஆணை அமைப்பு		49
முல்லையின் சிரிப்பு	(சிறு கதை)	51
உள்ள உணர்வு	(கற்பனை ஊற்று)	56
கல்வி	(விவேகாநந்தர்)	59
இவள் வறுமை	(பாடல்)	62
தமிழ் மொழி வழி அரசியல்		63
ஒடு-உருபு		67
வஞ்சிக் காண்டத்தின் இன்றியமையாமை		70

மற்றும், நகை நலம் முதலியன.

விலை 50 காசு.